விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 273 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 01 ஞாயிற்றுக்கிழமை (18.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# இலங்கை - இந்திய நல்லுறவு வலுவடையும்

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவிப்பு



*(கொழும்பு)*

இலங்கை - இந்தியாவுக்கிடையிலான நல்லுறவு மேலும் வலுவடையும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

## ஓமந்தையில் ரயில் விபத்து

### குடும்பஸ்தர் பலி

(வவுனியா)

வவுனியா, ஓமந்தையில் புகையிரதம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று இரவு 10 ▷19

## அமெரிக்கா பயணமாகிறார் அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 77ஆவது பொதுச்சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நாளை ▷19

## இருபாலையில் புலிகளின் புதையல் தோண்டி அகழ்வு

### 4 மணித்தியாலங்கள் தேடியும் எதுவும் அகப்படவில்லை



▷16

## அதிகாரம் இல்லாவிட்டாலும்

# நாட்டு மக்களுக்காக பணியாற்றுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



*(கொழும்பு)*

மக்களுக்குச் சேவை செய்வதற்கு அமைச்சுப் பதவிகளோ வரப்பிரசாதங்களோ தேவையில்லை. அதிகாரம் இல்லாவிட்டாலும் நாட்டு மக்களுக்காக பணியாற்றுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். *(02ஆம் பக்கம் பார்க்க)*

## 50 கிலோ யூரியா

### விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அரசு ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் பெரும்போக நெற்செய்கையின் போது, ஒவ்வொரு விவசாயிக்கும் 50 கிலோ கிராம் யூரியா உர மூடை இலவசமாக வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர ▷19

## தியாக தீபம் திலீபன் நினைவேந்தல்

### 7 பேர் கொண்ட பொதுக் கட்டமைப்பு உருவாக்கம்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வினை நடத்துவதற்கான பொதுக் கட்டமைப்பு பஷீர் காக்கா தலைமையில் 7 பேர் கொண்ட ▷19

## இலங்கை அணியைப் போல்

# ஒன்றிணைந்தால் வெற்றி பெறலாம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அணியினர் ஆசியகிண்ணத்தை கைப்பற்றுவதற்கு ▷19

## திருக்கோணேஸ்வரத்தை நோக்கி தல யாத்திரை நேற்று ஆரம்பம்



▷19

# திணறும் அரச நிறுவனங்கள் சம்பளம் வழங்குவதில் சிக்கல்?

(கொழும்பு)

பணப் பற்றாக்குறை காரணமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கடும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலைமை காரணமாக அந்த நிறுவனங்களின் அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பதும் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக பல முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில நிறுவனங்களில் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான எழுதுபொருள்களை கொள்வனவு செய்வது மற்றும் அத்தியாவசியப் பணியாளர்களு ▷20

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள
K.M.V.R - ஆயுர்வேத மருந்து & பான்சி கடைக்கு வேலையாட்கள் உடன் தேவை.

**076 913 2049, 077 292 0394**

K.M.V.R - ஆயுர்வேத மருந்து & பான்சி கடை
K.K.S வீதி மாவிட்டபுரம். (C-4938)



## Europe Visa

7 நாட்களில் இலங்கையிலிருந்து நேர்வழியில் ஐரோப்பா பயணமாக அரியவாய்ப்பு
Azerbaijan நாட்டிற்கு O/L தகைமையுடன் இன்றே பயணமாகுங்கள்
எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்
9 வருடகால தமிழ் மக்களின் நம்பிக்கை (12804)

**WINSTAR CONSULTANTS PVT Ltd**
**No.45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 395 0857**


## நாட்டு மக்களு...

மொனராகலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோது இவ்வாறு கூறிய அவர், தானும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழுவும் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு நாட்டுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், "அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள் மக்களுக்காக பணியாற்றுவோம்.

நாட்டின் ஜனநாயக வரலாற்றில் பாரம்பரிய எதிர்க்கட்சிக்கு அப்பால் சென்று, அரச அதிகாரம் இருந்தோ - இல்லாமலோ மக்கள் சமூகத்தை பலப்படுத்த தற்போதைய எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி செயற்பட்டுள்ளது.

இதற்காக எமக்கு அமைச்சுப் பதவிகளோ, சலுகைகளோ தேவையில்லை. எதிர்க்கட்சியில் இருந்தாலும், சலுகைகளை பொருட்படுத்தாமல் நாம் மக்களுக்காக முன் நிற்போம்.

ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்க்கட்சியாக இருந்தாலும், நாட்டைக் கட்டியெழுப்பத் தேவையான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்கிறது. சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளை இலக்காகக் கொண்டு சமூக நல மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இருந்த எதிர்க்கட்சிகள் அரச அதிகாரத்தைப் பெறுவது போன்ற அரசியல் சூதாட்டத்தில் தான் ஈடுபட்டன என்றார். (ம-7)


## VISA SERVICES

கனடா, UK, Germany, France, Romania போன்ற நாடுகளுக்கான விசாவினைப் பெற்றுக்கொள்ள இன்றே தொடர்புகொள்ளுங்கள்.
9 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கை. (12804)

**WINSTAR CONSULTANTS PVT Ltd**
**No.45, Vembadi Street, Jaffna.**
**077 395 0857**



## கார்கள்/ வான்கள் வாடகைக்கு

கார்கள்/ வான்கள் வாடகைக்கு விடப்படும்.
RSP Rent a car
யாழ்ப்பாணம் (12813)
**077 898 9691**



## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (12811)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



## சிங்களம் கற்போம் பேசுவோம்

எழுத, பேச, வாசிக்க
உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு (12806)
**077 345 0645**



## விற்பனைக்கு

யாழ். விக்டோறியா வீதியில் 14 பரப்புக் காணியும் 12 பரப்புக் காணியும் யாழ். வேம்படி பாடசாலைக்கு அண்மையில் 16 பரப்புக் காணியும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் (சிக்னல் சந்திக்கு) அண்மையில் 2 பரப்புக் காணியும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் (வைத்தியசாலைக்கு முன்பாக) 6 1/2 பரப்புக் காணியும் யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில் கந்தப்பு சேகரம் வீதியில் 10 பரப்புக் காணியும் யாழ். அரசடி வீதியில் ( நல்லூர் கோவிலுக்கு அண்மையில் ) 2 பரப்புக் காணியும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட கடையும் கே.கே.எஸ் வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 3 பரப்புக் காணியும் யாழ். கஸ்தூரியார் வீதியில் 12 அடி அகலம் 100 அடி நீளம் கொண்ட கடையும் விற்பனைக்கு. (12814)

**077 723 2535**



## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சேவையினை 138 சர்வதேச நாடுகளில் 71 வருடங்களாகவும் இலங்கையில் 41 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடங்கள்**

1. **Educator** பெண் (தங்கியிருந்து வேலை செய்தல் கட்டாயமானது)
   - உயர்தர (A/L) சித்தி, போதியளவு கணனியறிவு மற்றும் (Diploma or Higher Diploma) கற்கை நெறிச்சான்றிதழ் கொண்டிருப்பதுடன் சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - பாடசாலைகளுடன் நெருங்கிய தொடர்பைப் பேணக்கூடியவராகவும், பிள்ளைகளின் கல்விசார் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து அபிவிருத்தி செய்யக்கூடியவராக இருத்தல் அவசியம்.
   - மோட்டார் வாகன (bike) ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
2. சிற்றூழியர் - **Labour** (ஆண் 35 வயதிற்கு உட்பட்டோர்)
   - க.பொ.த சா/தரத்துடன் நற்பழக்கவழக்கம், பணிவு, தேக ஆரோக்கியமும் கொண்டவராக இருத்தல்.
   - சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
3. சாரதி - **Driver** (ஆண் 35 வயதிற்கு உட்பட்டோர்)
   - கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருப்பதுடன் குறைந்தது 2 வருட முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - நற்பழக்கவழக்கம், பணிவு, தேக ஆரோக்கியமும் கொண்டவராக இருத்தல்.
4. தாதி (**Nurse**) - பெண் (**Intern**)
   - முன் அனுபவத்தினை கொண்டிருப்பதுடன் தாதியர் கற்கைநெறி அல்லது மருந்தாளர் கற்கை நெறியில் NVQ தரச் சான்றிதழ் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 25.09.2022 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references."

தொடர்புகளுக்கு:
எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,
இல:219, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-221-1101
077-373-3711
மின்னஞ்சல்:jaffna@soscvsrilanka.org
(C-4902)



## Government TVEC Approved தாதியர் பயிற்சிப்பாடசாலை FLORENCE NIGHHTINGAL

### தாதியப்பயிற்சி நெறி - 2022



**நுழைவுத்தகைமை**
- க.பொ.த.சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல்
- விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்
- பயிற்சிகால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
- பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்

**கற்கை நிலையங்கள்**
- மருதனார்மடம் • சாவகச்சேரி

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள்
Viber: T.P.No.: 077 718 6438 Whatsapp: 077 482 4473 (C-4939)

நிர்வாகம், புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப்பாடசாலை



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலையில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்.
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்.
- 18 அடி பாதையுடன் நல்ல சூழல் நன்நீர் ஊற்று நிலம்.
- யாழ். நகரில் இருந்து 4 km தூரம்.
- 1 பரப்பின் விலை (600,000/=) ரூபா ஆறு இலட்சம்.
- பார்வையிடும் நேரம் காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை. (12815)

**077 288 0152**
**077 148 8348**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவகங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி-உரிமையாளர்கள் கவலை

**(கொழும்பு)**

**உணவுபொதி ஒன்றின் விலை 450 ரூபாவைத் தாண்டியதால், உணவகங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

மேலும், மா உணவின் விலை அதிகமாக உள்ளதால், உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை.

இதனால் உணவகங்களை பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# இலங்கைக்கு மேலும் 3.5 மில்லியன் டொலர் உதவி

(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவசர உதவியாக ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ளது.

ஏற்கனவே கடந்த மே 20 ஆம் திகதியன்று 3 மில்லியன் டொலர்களை ஜப்பான் இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக வழங்கியிருந்தது.

இந்த நிலையில், நேற்று வழங்கப்பட்ட 3.5 மில்லியன் டொலர்களையும் சேர்த்து 6.5 மில்லியன் டொலர்களை ஜப்பான், இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த உதவிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ஆகியவற்றின் ஊடாக வழங்கப்படுகின்றன.

இதேவேளை இலங்கை மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை போக்குவதற்கு இந்த உதவி பங்களிக்கும் என ஜப்பான் அரசாங்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (நி)

# நோயாளிகளுக்கு உணவு வழங்குவதில் சிக்கல் - தாதியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மருந்துத் தட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக சில மருத்துவமனைகளில் நோயாளர்கள் மற்றும் சுகாதார உதவிப்பணியாளர்களுக்கு ஒரு வேளை உணவை வழங்குவது பெரிய சிக்கலாக மாறியுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

உணவுப் பொருட்களை விநியோகிப்போருக்கு சரியான முறையில் பணத்தை வழங்கவில்லை என்பதால், மருத்துவமனைகளுக்கு உணவு, பழங்கள், சூப், கஞ்சி போன்றவற்றை சமைப்பதற்கு தேவையான மூலப்பொருட்கள், முட்டை, இறைச்சி, மீன் என்பன விநியோகிக்கப்படுவது குறைந்து வருவதாக சங்கத்தின் தலைவர் எஸ்.பி.மெதவத்த தெரிவித்துள்ளார்.

நோய்களில் இருந்து குணமாக நோயாளிகளுக்கு மருந்தை போன்று போஷாக்கான உணவையும் வழங்க வேண்டும்.

இந்த நிலைமை தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை பணத்தை செலுத்தி துரிதமாக நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# பெரும்பான்மையினரின் ஆதரவு எப்போதும் எனக்கு உண்டு

## ஜனாதிபதி ரணில் பெருமிதம்



(கொழும்பு)

நாட்டின் பிரச்சினைகளை நிவர்த்திக்க பெரும்பான்மையினரின் ஆதரவு தனக்கு இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவின் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சிக்கு வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதன் மூலம் இலங்கையின் பிரச்சினையை தீர்க்க முடியுமா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நிகழ்ச்சியில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்த அவர், அரச சொத்துகளுக்கு தீ வைப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. இதனை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். ஜனாதிபதி மாளிகையையும் எனது வீட்டையும் பிரதமர் அலுவலகத்தையும் பாராளுமன்றத்தையும் கைப்பற்றுவதன் மூலம் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும் என நீங்கள் நினைக்கின்றீர்களா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டத்தை மீறியோரை மாத்திரமே கைது செய்வதாகவும் நாட்டின் சட்டத்தின்படியே பொலிஸார் செயற்படுவதாகவும் அனைத்து விடயங்களும் சட்டபூர்வமாகவே இடம்பெறுவதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர்

# இந்தியா- பாகிஸ்தான் போட்டிக்கான டிக்கெட்டுக்கள் விற்றுத் தீர்ந்தன




இருபது-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் ஒக்டோபர் 16 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடக்க உள்ளது.

இதில் மொத்தம் 16 நாடுகள் பங்கேற்கின்றன. நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய 8 நாடுகள் நேரடியாக சூப்பர் 12 சுற்றில் விளையாடும்.

இந்தியா தனது முதல் போட்டியில் வரும் ஒக்டோபர் 23 ஆம் திகதி பாகிஸ்தான் அணியுடன் மோதுகிறது. இந்தப் போட்டி அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற உள்ளது. இந்தப் போட்டிக்கு இரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்தியா - பாகிஸ்தான் போட்டிக்கான டிக்கெட்டுக்கள் அனைத்தும் விற்று தீர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒட்டுமொத்தமாக அனைத்துப் போட்டிகளுக்கும் இதுவரை 5 இலட்சம் டிக்கெட்டுகள் விற்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

இதேபோல் வங்கதேசம்-தென் ஆபிரிக்கா அணிகள் மோதும் போட்டிக்கான டிக்கெட்டுகள், இந்தியா மற்றும் குரூப் ஏ இல் இரண்டாம் இடம்பிடிக்கும் அணியுடன் மோதும் போட்டிகளுக்கான டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்து விட்டன. இருப்பினும் கூடுதல் டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்படலாம். (நி)

இருபது-20 உலகக் கிண்ணம்

# இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களின் விபரம் அறிவிப்பு

இருபது-20 உலகக் கிண்ணத் தொடருக்கான எதிர்பார்ப்பு மிக்க இலங்கை கிரிக்கெட் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் அண்மையில் ஆசியக் கிண்ணத் தொடரில் வாகை சூடிய இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த அனைத்து வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

எனினும் ஆசியக் கிண்ணத் தொடரில் ஓரிரு போட்டிகளில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெணார்டோ வெளியேற்றப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக உபாதைக் காரணமாக ஓய்வில் இருந்த பினுர பெணார்டோ மேலதிக வீரர்களில் ஒருவராக உள்வாங்கப்பட்டுள்ளார்.

அத்துடன் உலகக்கிண்ண அணியில் இடம்பிடிப்பார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இளம் வீரரான துனித் வெல்லாலகே அணியில் இடம்பெறவில்லை.

மேலும் துடுப்பாட்ட வீரரான அவிஷ்க பெனார்டோ உபாதையில் இருந்து இன்னமும் முழுமையாக மீளாத காரணத்தால் அவரும் அணியில் இடம்பெறவில்லை.

வேகப்பந்து வீச்சாளர்களான துஸ்மந்த சமீர மற்றும் லஹிரு குமார ஆகியோர் உடற்தகுதி பொறுத்து அணியில் இடம்பிடிப்பார்கள்.

தசுன் சானக தலைமையிலான அணியில், தனுஷ்க குணதிலக்க, பெத்தும் நிஸங்க, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, பானுக ராஜபக்ஷ, தனஞ்சய டி சில்வா, வனிந்து ஹசரங்க, மகேஷ் தீக்ஷன, ஜெப்ரி வெண்டர்சே, சமிக்க கருணாரத்ன, துஸ்மந்த சமீர, லஹிரு குமார, தில்ஷான் மதுஷங்க, பிரமோத் மதுஷான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேலதிக வீரர்களாக, அஷேன் பண்டார, பிரவீன் ஜெயவிக்ரம, தினேஷ் சந்திமால், பினுர பெணார்டோ, நுவனிந்து பெனார்டோ ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (நி)

# புற்றுநோய் மருத்துவமனைக்கு 5 இலட்சம் அமெரிக்க டொலர்

வழங்கியது இலங்கை கிரிக்கெட் சபை

புற்றுநோய் மருத்துவமனைக்கு 5 இலட்சம் அமெரிக்க டொலர்களையும் ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கை வலைப்பந்தாட்ட வீராங்கனைகளுக்கு தலா 20 இலட்சம் ரூபாய் வீதமும் இலங்கை கிரிக்கெட் சபை நன்கொடையாக வழங்கியுள்ளது.

கிரிக்கெட் மற்றும் வலைப்பந்தாட்டத்தில் ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கை கிரிக்கெட் அணியினருக்கும் வலைப்பந்தாட்ட மகளிர் அணியினருக்கும் மற்றும் கொமன் வெல்த் போட்டிகளில் பங்குபற்றிய வீரர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் பாராட்டு நிகழ்வு நேற்று முன்தினம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனைக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 5 இலட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக ஜனாதிபதியிடம் கையளித்தது. (நி)

## மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

16 அணிகள் மோதும் இவ் உதைபந்தாட்டத் தொடரானது வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் இடம்பெறவுள்ளது. (நி)

# டுவிட்டரில் முதல் இடத்தைப் பிடித்த விராட்கோலி




இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட்கோலி கடந்த மூன்று ஆண்டுகளாக சரியான ஆட்டத்தை வெளிப்படுத்தாமல் திணறி வந்த நிலையில் அண்மையில் நடைபெற்ற ஆசிய கோப்பையில் சதமடித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.

கடந்த காலங்களில் விராட் கோலி மீது பல்வேறு விமர்சனங்கள் வைக்கப்பட்டன. எத்தனை விமர்சனங்கள் வந்தாலும் சமூக வலைத்தளங்களில் சூப்பர் ஸ்டாராக இருக்கிறார். இந்த நிலையில் தற்போது டுவிட்டரில் 5 கோடி பின்தொடர்பவர்களை எட்டிய முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை கோலி பெற்றுள்ளார்.

33 வயதான அவர் இன்ஸ்டாகிராமில் 21.1 கோடி பின்தொடர்பவர்களுடன் உலகின் மூன்றாவது பிரபலமான விளையாட்டு வீரர் என்ற பெருமைக்கும் சொந்தக்காரராக உள்ளார்.

இந்த வரிசையில் கிறிஸ்டியானோ றொனால்டோ (47.6 கோடி) மற்றும் லியோனல் மெஸ்ஸி ( 35.6 கோடி) ஆகியோர் முதல் மற்றும் இரண்டாவது இடத்தில் உள்ளனர். (நி)

# பஞ்சாப் அணியின் பயிற்சியாளராக ட்ரெவர் பெய்லிஸ் நியமனம்



பஞ்சாப் அணியின் தலைமை பயிற்சியாளராக ட்ரெவர் பெய்லிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஐ.பி.எல் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 15 சீசன்கள் நடந்து முடிந்துள்ளன.

இதுவரை நடந்த சீசன்களில் மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் அதிக முறை பட்டங்கள் வென்றுள்ளன. சீசன் ஆரம்பத்தில் இருந்து இதுவரை பெங்களூர், டெல்லி, பஞ்சாப் அணிகள் விளையாடி வருகின்றன.

ஆனால் அந்த அணிகளால் இன்னும் ஒரு பட்டம் கூட வெல்ல முடியவில்லை. இதில் பஞ்சாப் அணி பல்வேறு கப்டன்களையும் பயிற்சியாளர்களையும் மாற்றிப் பார்த்தும் இன்னும் ஒரு பட்டம் கூட வெல்ல முடியவில்லை. இந்நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு அனில் கும்ப்ளேவை பஞ்சாப் அணி பயிற்சியாளராக நியமித்தது.

ஆனால் கடந்த 3 சீசன்களாக அந்த அணி பிளே-ஆப் சுற்றுக்கு கூட முன்னேறவில்லை. இந்நிலையில் அந்த அணியின் பயிற்சியாளர் கும்ப்ளேவை அடுத்த ஐ.பி.எல் சீசனுக்கு முன் மாற்றப் போவதாக சில தகவல்கள் வந்தன.

இந்நிலையில் பஞ்சாப் அணியின் புதிய பயிற்சியாளராக ட்ரெவர் பெய்லிஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ட்ரெவர் பெய்லிஸ் அடுத்த ஐ.பி.எல் சீசனில் இருந்து பஞ்சாப் அணியின் பயிற்சியாளராக செயற்படுவார் எனக் கூறியுள்ளது. ட்ரெவர் பெய்ஸில் கடந்த 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டு கொல்கத்தா அணி சம்பியன் பட்டம் வென்ற போது அந்த அணியின் பயிற்சியாளராக இருந்துள்ளார்.

மேலும் இவர் 2019 ஆம் ஆண்டு உலகக்கோப்பை வென்ற இங்கிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி; இலங்கையில் மாற்றமடையாத எரிபொருள் விலை

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், அதற்கு இணையாக நாட்டில் எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படாமையினால் முச்சக்கர வண்டி தொழிற்துறையினர் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

எரிபொருள் திருத்தம் செய்யப்படாமையினால், அதனை நுகர்வோரிடம் இருந்து அறவிட நேரிட்டுள்ளதாக முச்சக்கரவண்டி சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது தொழில் துறையினை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சர்வதேச சந்தையில் பிரண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலையானது 91.35 அமெரிக்க டொலராகவும், டபிள்யு ரீ.ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்று 85.11 அமெரிக்க டொலராகவும் காணப்படுகின்றன.

உலக சந்தையில் எரிபொருள் விலையில் ஏற்படும் மாற்றங்களை கருத்திற்கொண்டு, இலங்கையில் அதற்கேற்ப மாதத்தின் 1 ஆம் மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருள் விலையில் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானங்களை எடுத்திருந்தது.

எனினும், அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதற்கு முன்னர் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம் ஒரு லீற்றர் டீசல் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பரீட்சை நடைபெறும் தினங்களில் மாற்றமில்லை

## பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு



(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் மற்றும், ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை தினங்களில் எவ்வித மாற்றமும் இல்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதன் படி புலமைப்பரிசில் பரீட்சை டிசம்பர் 4 ஆம் திகதியும் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் டிசம்பர் 5 முதல் 2023 ஜனவரி 2 ஆம் திகதி வரையும் இடம்பெறும்.

பரீட்சை நடைபெறும் இத்தினங்களில் எந்த மாற்றமும் ஏற்படாது என்பதை சகல அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அறியத்தருகின்றேன். அத்தோடு இவ்வாண்டுக்குரிய பாடசாலை தவணை அட்டவணைக்கமைவாக விடுமுறை காலத்தில் டிசம்பர் மாதத்தில் இப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே சகல பரீட்சார்த்திகளும் உரிய திகதியில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தயாராகுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# நிதி பற்றாக்குறை காரணமாக அரச நிறுவனங்கள் நெருக்கடியில்

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் பல நிதிப் பற்றாக்குறை காரணமாக நெருக்கடிகளை சந்திக்க நேர்ந்துள்ள நிலையில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபன சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த நிறுவனங்களின் அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பதும் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக பல முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில நிறுவனங்களில் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான எழுதுபொருள்களை, காகிதாதிகளை பெறுவது மற்றும் அத்தியாவசியப் பணியாளர்களுக்கு மேலதிக நேரக்கொடுப்பனவுகளை வழங்குவது போன்றவை பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சுக்களில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பது மாத்திரமன்றி ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை பராமரிப்பதிலும் கூட கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பல அரச நிறுவனங்களில் ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்குவதிலும் கடும் நெருக்கடி நிலை நிலவுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# தொடர்ந்தும் இலங்கைக்கு உதவுவோம் பிரதமரிடம் நோர்வே தூதுவர் உறுதி

(கொழும்பு)

நோர்வே அடுத்த வருடம் கொழும்பில் உள்ள தனது தூதரகத்தை மூடினாலும் மற்றும் அபிவிருத்தி உதவிகள் மற்றும் பிற வகையான உதவிகள் தொடரும் என நோர்வே தூதுவர் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் உறுதியளித்தார்.

நோர்வே தூதுவர் அண்மையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை அவரது அலுவலகத்தில் சந்தித்திருந்தார். (நி)

# இந்தியாவிலிருந்து கறவை மாடுகள்

(கொழும்பு)

நாட்டில் கறவை மாடுகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் இந்தியாவிலிருந்து கறவை மாடுகளை கொள்வனவு செய்வது தொடர்பில் அமைச்சு ரீதியாக கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது.

கறவை மாடுகள் பற்றாக்குறையால் கால்நடை சபைக்கு தினமும் கிடைக்கும் பாலின் அளவு குறைந்து வருகிறது. மேலும் பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் இருந்து கறவை மாடுகளின் விற்பனையும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, இந்தியாவிலிருந்து கறவை மாடுகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுடன் பல தடவைகள் கலந்துரையாடியதாகவும் பேச்சுவார்த்தை ஓரளவு வெற்றியடைந்ததாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (நி)

# ரயில் ஆசனங்களை இணையத்தில் பதிவு செய்வதில் பயணிகள் மும்முரம்

(கொழும்பு)

புகையிரத ஆசனங்களை முன்பதிவு செய்வதற்கு சுமார் 100,000 பேர் தினமும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதி ரயில்வே பொது முகாமையாளர் வஜிர சமன் பொல்வத்தகே தெரிவித்துள்ளார்.

ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மிகவும் பொருத்தமான நடவடிக்கையாகும். ஆனால் ரயில்வே திணைக்களத்தில் தற்போது உள்ள வெற்றிடங்கள் அதற்கு இடையூறாக இருப்பதாகவும் அந்த வெற்றிடங்களுடன் உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்றும் ரயில்வே திணைக்களம் இதற்காக இரண்டு ஆண்டு திட்டத்தைத் தொடங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

18.09.2022
புரட்டாதி 01, ஞாயிற்றுக்கிழமை
அட்டமி மாலை 6.10 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 5.34 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை

மத்தியாஷ்டமி
சந்திராஷ்டமம் - விஷாகம், அனுசம்

வளவன்


மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கடகம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களினால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், விரயங்கள் கூடும் நாள்.


துலாம்

தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியில் மனரீதியான செய்தியொன்று வந்துசேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்

வியாபார விருத்தியுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


சிம்மம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் வருமானத்தை அதிகரிக்க திட்டங்கள் தீட்டுவீர்கள்.


விருச்சிகம்

எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.


கும்பம்

பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், சந்தோஷம் கிடைக்கும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.


மிதுனம்

செயற்பாடுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.


கன்னி

புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


தனுசு

நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நீண்டநாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


மீனம்

புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

கொடி போல தவழ்ந்து, பூ போல சுமந்து வாழக் கற்றுக்கொள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் இடைநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு வரும்கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளை சந்தித்து கலந்துரையாடி விரைவில் விடுதலைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவித்ததைத் தொடர்ந்து கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்ததுடன் தங்களுடைய போராட்டத்தையும் கைவிடுவதாக தெரிவித்தனர்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு வரும் கைதிகளினுடைய உறவினர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் வடமாகாண ஆளுநரின் வாக்குறுதிக்கமைய நேற்று சனிக்கிழமை மதியம் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் உடல்நிலை மோசமாவதை கருத்திற்கொண்டு தகுந்த வாக்குறுதியை அவர்களுக்கு வழங்கி உணவுத் தவிர்ப்பை முடிவுறுத்தி பிணையிலோ பொதுமன்னிப்பிலோ விடுதலை செய்யுமாறு உறவினர்கள் வேண்டுகோள் விடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-18-33-104)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு புதிய அத்தியட்சகர் நியமனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் புதிய மருத்துவ அத்தியட்சகராக மருத்துவர் திரு. சி.குமரவேள் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார மருத்து வமனையில் இதுவரை காலமும் அத்தியட்சகராக விளங்கிய திருமதி. டயாழினி மகேந்திரன் இடமாற்றம் கிடைத்து சென்றுள்ள நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புதிய அத்தியட்சகரான குமரவேள் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் வடக்கு மாகாண திட்டமிடல் மருத்துவ அதிகாரியாக கடமையாற்றிய நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு இடமாற்றம் கிடைத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)



வடலியடைப்பு இந்து இளைஞர் மன்றக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலய முன்றலில் இடம்பெற்றது. பாரத்தனை ஐயனார் ஆலயத் தலைவரும் இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியருமான க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி .ஆறு.திருமுருகன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார். (படம்:- ரவிசாந்)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மறைந்த கு.வனனிய சிங்கத்தின் நினைவு தினம் இன்று யாழ்ப்பாணம் நீர்வேலியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து நினைவு கூரப்பட்டது. (படம்- கஜிந்தன்)

### நல்லூரில் அமைந்துள்ள
## ஐ.ம.ச அலுவலகம் மீது கல்வீசித் தாக்குதல்

(அராலி)

யாழ். வட்டுக்கோட்டை தொகுதி ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளரும் மனித உரிமைகள் மற்றும் சமூக செயற்பட்டாளருமான முருகவேல் சதாசிவம் என்பவருடைய நல்லூரில் அமைந்துள்ள அலுவலகத்தின் மீது இனந்தெரியாத நபர்களால் கடந்த வியாழக்கிழமை இரவுநேரம் 10:30 மணியளவில் கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-104)

# மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் வருகின்ற ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. எனவே கழகத்தின் செயலணி உறுப்பினர்கள், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், ஆர்வரர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கழகத்தின் தலைவர் சி. ஞானசேகரம் அழைப்பு விடுத்துள்ளார். (நி)

### யா/ நடேஸ்வரக் கல்லூரியின்
# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/நடேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் கு.விமலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் ஏனைய விடயங்களும் கலந்தாலோசிக்கப்படவுள்ளமையால்பழைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். (நி)

# இன,மத பேதங்கள் இல்லாது ஒன்றிணையும் காலம் உருவாகி உள்ளது

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு



(அராலி)

நாட்டின்தேசிய கொள்கைத் திட்ட அடக்குமுறைக்கு எதிராக தமிழ், சிங்கள, முஸ்லிம் என பேதமில்லாது ஒன்றிணைய வேண்டிய காலம் உருவாகி வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற கோப் குழுவின் தலைவருமான ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை என்பது ஸ்திரத்தன்மை இல்லாத நிலையில் காணப்படுகின்றது. அதற்கான வலுவான திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. காரணம் கேட்டால் அதற்கான டொலர் இல்லை என்கின்றனர். இவ்வாறான நிலை தொடருமானால் இன்னும் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

காணாமல் போனவர்களின் உறவுகளுக்கான நீதி, தொழில்துறை இன்மை, விதவைகள், சிறுவர்களுக்கான போஷாக்கு இன்மை, கொரோனாத் தொற்று நிலை யிலும் கூட மாணவர்களின் கற்றல் நிலைமைகளில் வினைத்திறன் அற்ற நிலைமைகள், விவசாயிகளுக்கான உரமானியம் இல்லாமை போன்ற பல பிரச்சினைகளுக்கு வடக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

ஆனாலும் இதற்கான திட்டங்கள் சரியான முறையில் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. (நி-104)



புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் ஈழத்தின் மூத்த நூலியலாளர் என்.செல்வராஜா எழுதிய 'நூல்தேட்டம் 16', 'நூலகவியல்- பெருந்தொகுப்பு', 'நான் கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்' ஆகிய மூன்று நூல்களின் அறிமுகமும் வெளியீடும் சுன்னாகம் பொதுநூலக நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் வலி.தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (படம்:ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 361
Viber 076 636 3378



## 13-ஆவது-திருத்தம்

# ஐ.நாவில் ஒலித்த இந்தியக்குரல் பணியுமா இலங்கை

• அபிமன்யு

இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணப்பாடு பேரினவாத ஆட்சியாளர்களிடம் ஒரு போதும் இருந்ததில்லை.

மாறாக தமக்கு தேவையான நேரத்தில் தேவைக்கேற்ப வெறும் வார்த்தை யாலங்களை விடுவதில் மாத்திரம் வீரர்களாக இருந்தார்களே தவிர, அவர்கள் பெரும்பான்மை சிங்களவர்களின் நலன் சார்ந்து சிந்திப்பதைத் தவிர சிறுபான்மை இனங்கள் தொடர்பில் சிந்திக்கவில்லை என்பதே உண்மை.

இனங்களுக்கிடையிலான முரண்பாடு எங்கு தோற்றம் பெற்றது. என்பதைக் கூட பகுத்தறிந்து பார்க்கும் தன்மை இல்லாவர்களா இவர்கள் என்பதற்குள் இருக்கும் அறியாமையை எவ்வாறு விபரித்துவிட முடியும்.

சுதந்திரத்திற்குப் பின்னரான காலங்களில் இனங்களுக்குள் ஏற்பட்ட பிளவு-முரண்பாடு முற்றி வெடிக்க காரணமான வர்களே பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் தான் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளை மழுங்கடித்து இந்த நாடு பெரும்பான்மை சிங்களவர்களுக்கே உரியது என்ற எண்ணப்பாட்டை பெரும்பான்மை சிங்கள மக்களின் மனங்களில் விதைத்தவர்களும் இந்த அரசியல் தலைவர்களே.

> **இது சிங்கள பௌத்த நாடு. இங்கு நாம் வைத்ததுதான் சட்டம். இந்தியாவென்ன, அமெரிக்காவென்ன யார் வந்தாலும் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது.**

இனங்களுக்கிடையிலான முரண்பாடு என்பது இனவாதம், மதவாதம் என்பதற்குள்ளேயே பெரும்பாலும் அடங்கி விடுகிறது.

இதுவே சிறுபான்மை தமிழினத்தின் ஆயுதப் போராட்டத்திற்கான காரணமாகிறது.

ஆனால் இவற்றை இன்றுவரை ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை இனத்தவர்கள் எவரும் ஏற்றதாயும் தீர்த்ததாயும் இல்லை.

மாறாக இனவாதத்தை தூண்டும் செயற்பாடுகளிலேயே இன்றும் உள்ளார்கள் என்பது அவர்கள் பேச்சுக்களில் புலப்படுகிறது.

அத்துடன் தமிழினத்திற்கு நிரந்தரமானதொரு அரசியல் தீர்வை வழங்குவதற்கு சிங்களத் தலைவர்கள் எவருக்கும் விருப்பம் இல்லை என்பதும் முக்கியமான விடயமாகிறது.

தமக்குள் எவ்வளவு முரண்பாடுகள், பிரச்சினைகள் இருப்பினும் தமிழினத்திற்கு தீர்வு என்ற விடயம் எடுபட்டவுடன் அவர்கள் ஒன்று சேர்ந்து அவற்றை எதிர்ப்பதில் முனைப்புக் காட்டுகின்றனர்.

தற்போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இலங்கை தொடர்பிலும் சிறுபான்மைத் தமிழினத்திற்கு ஆட்சியாளர்கள் இழைத்த இன்னல்கள் தொடர்பிலும் பேசப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இறுதி யுத்தத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்ற மீறல்களுக்கு இலங்கை பொறுப்புக் கூறத் தவறிவிட்டது.

எனவே போர் மீறல்களை மேற்கொண்டவர்களை சர்வ தேச விசாரணையூடாக சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்ற கோஷம் எழ ஆரம்பித்த



வுடன் ஒன்றுக்கொன்று பிரிந்து நின்ற சிங்களத் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சர்வதேசத்திற்கு இலங்கையில் தலையிட எந்த அனுமதியும் இல்லை. இலங்கை இறை யாண்மையுள்ள நாடு. நாம் எமது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம் என வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

இலங்கை குறித்த பிரேரணையை கடந்த காலங்களில் இருந்து இன்றைவரை கொண்டு வருவது அமெரிக்காவே.

வல்லரசு நாடான அமெரிக்காவால் கொண்டு வரும் பிரேரணைகளை கூட ஐ.நாவில் நின்று கொண்டு எதிர்க்கும் திறனை இலங்கை கொண்டுள்ளது எனின் மனித உரிமைகளை மீறியதாகக் கூறப்படும் இலங்கைக்கு எத்தனை நாடுகள் ஆதரவு தெரிவிக்கின்றன என்பதனை அவதானிக்க முடியும்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் இரட்டை வேடம் போட்டு வந்த இந்தியா இம்முறை 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை இலங்கையில் முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என ஐ.நாவில் தெரிவித்திருக்கும் கருத்து ஈழத்தமிழினத்திற்கு ஆறுதலளிப்பதாக அமைந்துள்ளது.

ஆயினும் இந்தியாவின் குறித்த கூற்றிற்கு இலங்கை ஆட்சியாளர்கள் கண்டனங்களைத் தெரிவிக்க ஆரம்பித்துவிட்டனர்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலம் என்பது தமிழினத்தினால் முழுமையாக ஏற்கப்பட்ட ஒன்றல்ல.

எனினும் இருக்கும் நிலையில் இதையேனும் பெற்றுவிடுவோம் என்ற மனநிலையிலேயே குறித்த வரைபை எதிர்பார்க்கிறது தமிழினம்.

தமிழினம் அறைகுறையாய் ஏற்றுக்கொண்ட அற்ப சொற்ப அதிகாரங்கள் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தைக்கூட சிறுபான்மையினருக்கு வழங்குவதற்கு பேரினவாத ஆட்சியாளர்கள் விரும்பவில்லை எனின்,

இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. இங்கு நாம் வைத்தது தான் சட்டம். இந்தியாவென்ன, அமெரிக்கா வென்ன எந்தக் கொம்பன் வந்தாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்ற மன நிலையிலேயே இன்றும் இலங்கை பேரினவாத அரசியல் வாதிகள் இருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விஸ்வலிங்கம் தான் எடுத்து வந்த தியாகி திலீபனின் திருவுருவப் படத்தை ஆலடியில் வைத்தார்.

அந்நேரம் பார்த்து அனைவரும் எழுந்து நிற்க, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அனைவரும் அமர, ஆலடியில் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்க பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை நிபுணராக இருந்து அரும் பெரும் சேவையாற்றிய மருத்துவர் குகதாசன் அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

சிவபூமி அறக்கட்டளையின் நிதிப் பொறுப்பாளராக இருந்து மருத்துவர் குகதாசன் அவர்கள் ஆற்றிய சேவையை நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது. சிவபூமி அமைப்பின் நிறுவுநர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் முன்னெடுத்த அரும்பெரும் சேவைகளுக்கு மருத்துவர் குகதாசன் பக்கபலமாக இருந்து பணியாற்றியவர்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைக்க நினைத்தவர் போல, மூப்பர் எழுந்தார்.

அதுசரி, பிரிட்டன் மகாராணி எலிசபெத் அம்மையாருக்கு அஞ்சலி செலுத்த ஜனாதிபதி ரணில் பிரிட்டனுக்கு போகிறார்.

அந்த வகையில இந்த நாட்டைத் தங்கட ஆட்சி அதிகாரத்துக்குள்ள வைத்திருந்தவர்களை இலங்கை கௌரவிக்குது.

கங்காணி: உண்மை தான் இந்த நாட்டைக் கைப்பற்றியவர்களுக்கு கௌரவம் கொடுக்கிற இலங்கை ஆட்சியாளர்கள், இந்த நாட்டை ஆண்ட தமிழ் இனத்தை ஓரங்கட்ட நினைப்பது தான் விசித்திரமாக இருக்குது.

சாத்திரியார்: உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்று சொல்லுவினம். ஆனால் கந்தறுந்து காவடி எடுக்கிற இலங்கை, உலகத் தலைவர்களிட்ட உதவி கேட்கிறதுக்கு மகாராணியாற்ற மரணச் சடங்கைப் பயன்படுத்துது எண்டு தான் நான் சொல்லுவன்.

சிறாப்பர்: அதெண்டால் உண்மை தான். இதையும் கடந்து தமிழ் மக்களின்ர விஷயத்தில பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழ் மக்களுக்குச் சார்பாக இருக்கிற விடயம் தெரிந்தது தானே. அதுதான் இந்த நேரத்தில மகாராணியாற்ற இறுதிச் சடங்கில கலந்து கொள்வதன் மூலம் பிரிட்டனையும் வளைத்துப் போடலாம். உலகத் தலைவர்களையும் சந்தித்து உதவிகளையும் கேட்கலாம் எண்ட நோக்கில தான் ஜனாதிபதி ரணில், பிரிட்டனுக்குப் போயிருக்கிறார்.

பண்டிதர்: என்ன இருந்தாலும் பிரிட்டனின் ஆட்சியில இருந்த இந்தியாவும் மகாராணியின்ர மறைவையொட்டிக் கடும் அஞ்சலி செலுத்துது.

விதானையார்: என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்?

பண்டிதர்: மகாராணியின் மறைவையடுத்து விசேட நிகழ்வுகளை இந்திய மத்திய அரசு தவிர்த்து வருகிறது. இதில விசித்திரம் என்னவெண்டால், கடந்த 11 ஆம் திகதி மகாகவி பாரதியாரின் நினைவு தினம். வழமையில யாழ்ப்பாணத்தில உள்ள இந்தியத் துணைத்தூதரகம் நல்லூர் அரசடி வீதி, பருத்தித்துறை வீதி, வைமன் வீதி சந்திக்கிற சந்தியில இருக்கிற பாரதியாற்ற சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துறது.

ஆனால் இந்த முறை மகாராணியாருக்கு துக்கம் தெரிவிக்கும் பொருட்டு, பாரதியாற்ற நினைவு தினத்தை அனுஷ்டிக்காமல் விட்டிட்டினம்.

வாத்தியார்: இதென்ன நாசமறுப்பு. பாரதியாற்ற நினைவு தினத்தை அனுஷ்டிக்கிறதுக்கும் மகாராணியாருக்கு துக்கம் அனுஷ்டிக்கிறதுக்கும் என்ன தொடர்பு.

பண்டிதர்: சில வேளை அந்நியர் ஆட்சியை பாரதியார் எதிர்த்ததால அவரை நினைவு கூராமல் தவிர்த்திருப்பினம் போல.

விதானையார்: ஓமோம். இஞ்ச சில தமிழ் அரசியல் கட்சிகள் தியாகி திலீபனை நினைவு கூருவதன் மூலம் தங்கட அரசியலை நடத்துகிற மாதிரி, இந்தியாவும் மகாராணியின் மறைவுக்காக பாரதியாரின் நினைவு தினத்தை அனுஷ்டிக்காமல் விடுகிற அரசியலைச் செய்திருக்குது.

சாத்திரியார்: ஓ! இப்ப எங்கும் அரசியல் தானே நடக்குது. முன்பெல்லாம் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில தீர்மானம் கொண்டு வந்த போது, இலங்கைக்குச் சார்பாக நடந்த இந்தியா, இந்த முறை ஐ.நாவில இலங்கையை இறுக்க நினைக்குது எண்டால், அதற்குத் தமிழர்களின்ர நலன் காரணமில்லை.


மாறாக, இலங்கை சீனாவோட தொடர்பை வைத்துக் கொண்டு இந்தியாவுக்குத் தலையிடி கொடுக்குதல்லோ அதுதான் இந்தியா இப்ப விடாத பிடி எண்டு நிற்குது. இப்படித் தான் எல்லாம்.

சிறாப்பர்: சாத்திரியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இந்தாப் பாருங்க இரண்டு மாதத்துக்குள்ள தமிழ் மக்களின்ர பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எண்டு ஜனாதிபதி ரணில் சொல்லியிருக்கிறார்.

இதுக்குள்ள இரண்டு நோக்கம் இருக்குது. அதில ஒண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரை சமாளிப்பது. இரண்டாவது எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில கலந்து கொள்ளும் போது, உலகத் தலைவர்கள் ஏதேனும் கேட்டால்; இந்தா இரண்டு மாதத்தில இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போகிறோம் எண்டு சொல்லலாமல்லோ.

விதானையார்: தீர்வுத் திட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தியவர் இரண்டு மாதத்தில தீர்வு காணப் போறாராம்.

எல்லாம் செப்படி வித்தை தான். இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## ராணியாற்ற இறுதிச் சடங்கில இலங்கைக்கும் உதவி கேட்கலாம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசியக்கிண்ணம் இலங்கை அணி வென்றது குறித்து என்ன சிந்திக்கிறீர்கள் வியாசரே?






வெற்றிக்கு வழியேதும் இருந்தால் சொல்லமுடியுமா வியாசரே?

**மதுவன் — மீசாலை**

**உண்மையான நண்பனை நாம் எப்போது காணலாம் வியாசரே?**

இரண்டு நண்பர்கள் காட்டுவழியில் நடந்து செல்கின்றனர் காட்டின் நடுவே திடீரென கரடி வந்துவிட்டது.
ஒரு நண்பன் ஓடிப்போய் மரத்திலேறிவிட்டான். மற்றவனுக்கு மரம் ஏறத்தெரியாது.
ஏது செய்வது என்று திகைத்தவன் இறந்தவர் போல மூச்சை அடக்கியபடி கிடந்தான். கரடிவந்து காதருகே நுகர்ந்து விட்டு இறந்த உடல் என எண்ணி சென்று விட்டது.
மரத்தில் இருந்து இறங்கிய நண்பன் கேட்டான் உனது காதில் கரடி ஏதோ கூறியதே என்ன என? அதற்கு அவன் கூறினான் ஆபத்தில் உதவாத நண்பனை நம்பாதே எனக் கூறியது என்று.

**ராஜ் — மந்துவில்**

**ஆசியக்கிண்ணம் இலங்கை அணி வென்றது குறித்து என்ன சிந்திக்கிறீர்கள் வியாசரே?**

அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை அணி அச்சுறுத்தல் மிக்க அணி.
எந்த நேரத்தில் எவ்வாறு செயற்படும் என்பதை கணித்துவிட முடியாது.
இலங்கை அணியின் வெற்றிகள் அனைத்தையும் மீள் நினைவு படுத்திப்பார்த்தால் அவை திறில் வெற்றிகளே.
உலகக் கிரிக்கெட் அணிகளில் இலங்கையை அச்சுறுத்தல் மிக்க அணியென வர்ணிக்கப்படுகிறது. அதை அன்றிலிருந்து இன்றுவரை நிரூபித்துக்கொண்டே இருக்கிறார்கள் வீரர்கள்.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**இதழினி — புலோலி**

**வாழ்க்கையில் போராட்டம் இருக்கலாம் வாழ்க்கையே போராட்டமாக இருந்தால்...?**

மாட்டுவண்டிச் சவாரி பார்த்திருக்கிறீர் களா? அங்கு மாடுகள் ஓடுவதற்காக ஆணி சொருகிய தடியினால் மாட்டைக் குற்றவார்கள். அந்த வலியை பொறுக்காத மாடுகள் விரண்டு வேகமாக சீறிக்கொண்டு வரும். முடிவிடத்திற்கு வந்தும் அதன் வேகம் குறையவே குறையாது.
இதுபோலதான் வாழ்க்கையும். போராட்டங்கள் என்பது எம்மை முன்னோக்கிச் செல்லச் செய்யும் ஆணிசெருகிய தடிகளே.
எந்த வலிகளையும் தாண்டி வெற்றிக் கோட்டை எட்டுவதே எமது இலக்காக இருக்க வேண்டும்.
வெற்றி பெறுகிறோமோ இல்லையோ என்பது முக்கியமல்ல வெற்றிக்கோட்டை எட்டுகின்றதே எமது இலக்காக இருக்க வேண்டும்.

**சுதன் — குப்பிழான்**

**வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களை சுட்டுக்கொன்றது போர் குற்ற மீறலாகாதா வியாசரே?**

ஒருவேளை இதேவேலையை சிறுபான்மை தமிழினம் செய்திருக்குமாக இருந்தால் இன்று சர்வதேச விசாரணை நடந்து முடிந்து சம்மந்தப்பட்ட அனைவரும்கும் தண்டனை கிடைத்திருக்கும்.
துரதிஷ்டம் பெரும்பான்மையினர் இதைச் செய்துவிட்டனர். அதனால் நீதி கிடைக்க காலம் தாழ்த்தப்படுகிறது.
ஆனால் நீதி கிடைக்கும் என்பது உண்மை. அது சர்வதேசத்தால் ஆகாது சர்வவல்லமையுள்ள சக்தியால் நடந்தேறும். நம்புவோமாகா.

**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தாரகா — யாழ்ப்பாணம்**

**வெற்றிக்கு வழியேதும் இருந்தால் சொல்லமுடியுமா வியாசரே?**

உலக பணக்காரர்களில் ஒருவரான பில்ட்கேஸிடம் ஒரு பெண் பேட்டி காண்கிறார். பேட்டியின் நடுவே உங்கள் வெற்றிக்கு என்ன காரணம் என கேட்கின்றார்.
உடனே பில்ட்கேஸ் ஒரு வெற்றுக் காசோலையை எடுத்து எவ்வளவு தொகை என்றாலும் போட்டுக்கொள்ளுங்கள் என அந்தப் பெண்ணிடம் கொடுக்கின்றார்.
அதற்கு அந்தப் பெண் இல்லை எனக்கு இது வேண்டாம். நான் கேட்ட கேள்விக்குப் பதில் கூறுங்கள் என்றார்.
ஒருதடவை அல்ல மூன்று தடவைகள் அவர் காசோலையைக் கொடுக்கிறார். அந்தபெண்ணும் மறுக்கிறார்.
அதன் பின்பு பில்ட்கேஸ் பேசுகிறார். நான் வாய்ப்புக்களைத் தவறவிடுவதில்லை. இப்போது மூன்று வாய்ப்புக்கள் உங்களுக்கு வழங்கப்பட்டது. இந்த காசோலையைப் பெற்றிருந்தால் உலகப் பணக்காரர் பட்டியலில் நீங்களும் இருந்திருப்பீர்கள். உங்களுக்கு கிடைத்த வாய்ப்பை தவற விட்டு விட்டீர்கள் என்று கூறினார்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**சர்வதேச விசாரனை நடைபெறும் தானோ வியாசரே?**

நடக்கும் என்பர் நடக்காது. நடக்காது என்பர் நடந்துவிடும். கிடைக்கும் என்பர் கிடைக்காது. கிடைகாதென்றால் கிடைத்துவிடும். என்ற கண்ணதாசன் வரிகளே ஞாபகம் வருகிறது.
நடந்தவற்றை நடக்க வில்லை என மறுப்பவர்கள் வாழும் திருநாட்டில் எப்படி நீதி கிடைக்கும்.
மனச்சாட்சி இருக்கும் எவரும் இவ்வாறு செயற்பட மாட்டார்கள்.
வீதியில் போகும்போது வாகனத்தில் அடிபட்டு இறந்துகிடக்கும் நாய்,பூனைக்கு இரக்கம் தெரிவிக்கும் இனம் தமிழினம். அதே தமிழனத்திற்கு இரக்கம் காட்ட மறுத்து விட்டனரே.

**திவ்வியபாரதி — வதிரி**

**மனித மனங்கள் எப்படிப்பட்டது என்பதை நினைக்க முடியவில்லையே வியாசரே.?**

அண்மையில் ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்தேன். அறு சுவை உணவுக்கு மேல் மிகவும் சுவையான நிறைவான உணவு. கறிகளில் எண்ணிக்கையும் சற்று அதிகம் தான்.
என்னருகே இருந்து உணவு உண்டவர்கள் சாப்பாடு சூப்பர் என பேசியது என் காதில் வீழ்ந்தது.
அவர்கள் இருவரையும் வெளியில் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர்கள் பேசியதும் என் காதில் வீழ்ந்தது. "என்ன இருந்தாலும் இப்படி செலவு செய்யக் கூடாது ஆடம்பரத்திற்கும் ஓர் அளவு இருக்க வேண்டும் இப்படி அளவுகணக்கின்றி சாப்பாடு கொடுத்து என்ன பயன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : ரத்தத் திலகம்
இயற்றியவர் : கவிஞர் கண்ணதாசன்
இசை : கே.வி.மஹாதேவன்
பாடியவர் : டி.எம்.சௌந்தரராஜன்



**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு**
**ஒரு கோல மயில் என் துணையிருப்பு**
**இசை பாடலிலே என் உயிர் துடிப்பு**
**நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு**

**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு**
**ஒரு கோல மயில் என் துணையிருப்பு**
**இசை பாடலிலே என் உயிர் துடிப்பு**
**நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு**

**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...**

**காவியத் தாயின் இளையமகன்**
**காதல் பெண்களின் பெருந் தலைவன்**
**நான் காவியத் தாயின் இளையமகன்**
**காதல் பெண்களின் பெருந் தலைவன்**
**பாமர ஜாதியில் தனி மனிதன் நான்**
**படைப்பதனால் என் பேர் இறைவன்**

**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு**
**ஒரு கோல மயில் என் துணையிருப்பு**
**இசை பாடலிலே என் உயிர்த் துடிப்பு**
**நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு**

**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...**

**மானிட இனத்தை ஆட்டி வைப்பேன் அவர்**
**மாண்டு விட்டால் அதை பாடி வைப்பேன் நான்**
**மானிட இனத்தை ஆட்டி வைப்பேன் அவர்**
**மாண்டு விட்டால் அதை பாடி வைப்பேன் நான்**
**நிரந்தரமானவன் அழிவதில்லை எந்த**
**நிலையிலும் [illegible]கு மரணமில்லை**

**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு**
**ஒரு கோல மயில் என் துணையிருப்பு**
**இசை பாடலிலே என் உயிர் துடிப்பு**
**நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு**
**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு**

# நகைச்சுவை உணர்வு கொண்ட ராணி இரண்டாம் எலிசபெத்

கடந்த 70 ஆண்டுகளாக ஐக்கிய ராஜ்ஜியத்தின் அரச தலைவராக இருந்த ராணி இரண்டாம் எலிசபெத், பதற்றமான சூழ்நிலைகளில் சிறப்பாக செயற்பட்டு வழிநடத்தினார். பொது வெளியில் அவரது வாழ்க்கை மிகவும் கவனமாக கையாளப்பட்டது. அப்போது அவர் எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாத வகையில் இருப்பார்.

ஆனால் அவர் பல தருணங்களில் அவரது நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக சற்று வயதான காலத்தில் நிறைய வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், ராணியின் பேரன் சஸெக்ஸின் கோமகன் ஹேறி, அளித்த பேட்டியில் அவரது பாட்டி "சிறந்த நகைச்சுவை உணர்வை" கொண்டிருப்பது தான் அவரிடம் உள்ள சிறந்த குணம் என்று குறிப்பிட்டார்.

வரலாற்றாசிரியரும் எழுத்தாளருமான சர் ஆண்டனி செல்டன், ராணி தன்னைத் தானே தீவிரமான ஒருவராக எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறினார். "இந்த பண்பு அவரது ஆட்சியின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்களித்தது." என்றார் செல்டன்.



அவரது நகைச்சுவை உணர்வை நம்மிடம் வெளிப்படுத்திய சில தருணங்களும் நிகழ்வுகளும் இங்கே:

### கரடியுடன் தேநீர் விருந்து

பிரிட்டன் ராணியாக பதவியேற்று 70 ஆண்டுகள் ஆனதையொட்டி கடந்த ஜூன் மாதம், பிபிசி சார்பில் பக்கிங்ஹாம் அரண்மனையில் சிறப்பு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில், பேடிங்கடன் கரடியுடன் ஒன்றாக அமர்ந்து தேநீர் விருந்தில், ராணி எலிசபெத் பங்கேற்பது போன்று படமாக்கப்பட்டது.

இந்த விருந்தின்போது, கரடி தான் அணிந்திருந்த சிவப்பு நிறத் தொப்பியைக் கழற்றி, தனது விருப்ப உணவான மர்மலேட் சாண்ட்விச்சை எடுத்தது.

எப்போதும் அவசரத்தேவைக்காக இந்த இடத்தில் ஒரு சாண்ட்விச் வைப்பது வழக்கம் எனவும் கரடி தெரிவித்தது. அப்போது யாரும் எதிர்பாராத வகையில், ராணி எலிசபெத் தனது கருப்பு நிற ஹேண்ட் பேக்கில் இருந்து, ஒரு சாண்ட்விச்சை எடுத்து, தானும் வைத்திருப்பதாக கரடிக்கு நகைச்சுவையுடன் பதிலளித்தார்.

### பேரனுடன் இரசித்த வீடியோ

2016 ஆம் ஆண்டு இன்விக்டஸ் கேம்ஸ் தொடர்பான விளம்பர முன்னோட்ட நிகழ்வில் தனது பேரன் இளவரசர் ஹேறியுடன் ராணி இரண்டாம் எலிசபெத் தோன்றி நடித்த காட்சியும் சமூக வலைத்தளங்களில் வைரலானது. அந்தக் காட்சியில், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, தனது மனைவி மிஷேல் ஒபாமாவுடன் இணைந்து இளவரசர் ஹேறிக்கு, விளையாட்டு போட்டிக்கான சவால் விடுக்கும் வீடியோ பதிவு ஒன்றை அனுப்பி இருப்பார்.

இளவரசர் ஹேறி, அதனை தனது பாட்டியிடம் காண்பித்து விளக்குவார். அப்போது எதேச்சையாக, போட்டியில் பங்கு பெறு என தனக்கே உரிய நகைச்சுவை பாணியில் ராணி எலிசபெத் தெரிவித்திருப்பார்.

### வாளால் கேக் வெட்டிய ராணி

2021 ஆம் ஆண்டு ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் நடைபெற்ற விழாவில் ராணி எலிசபெத், வழக்கத்துக்கு மாறாக ஒரு செயலை செய்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். ஆம், அந்த நிகழ்வில் கேக் வெட்டும் நிகழ்வில் பங்கேற்ற போது, ராணி எலிசபெத், வாளை எடுத்து கேக் வெட்டியது அங்கிருந்தவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ராணி வாளை எடுக்கும் முன், அங்கிருந்த தன்னார்வலர் ஒருவர், கேக் வெட்டுவதற்கு என பிரத்யேக கத்தி இருப்பதாக ராணி எலிசபெத்திற்கு நினைவூட்டியும் அதனை எடுக்க மறுத்து வாளால் கேக் வெட்டினார்.

### "இயல்பாக இருப்பதற்கான ஒரு வழி"

உயர்மட்ட அளவில் நடக்கும் விழாக்களில் அனைவரின் கவனமும் அவர் மீது இருக்கும். பிரிட்டன் உளவியல் சங்கத்தின் ஆட்ரி டாங்கின் கூற்றுப்படி, இத்தகைய நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு சிரிப்பு மிக முக்கியமான பதில். "இது இயல்பாக இருப்பதற்கான ஒரு வழி." என்று அவர் கூறுகிறார்.

"நாம் நம்மை பெரிதாக எடுத்துக் கொள்ளத்தேவையில்லை." என்று அவரது தனது கிறிஸ்துமஸ் வாழ்த்து செய்தியில் ராணி கூறியிருந்தார். ராணியும் இளவரசர் பிலிப்பும் ஒன்றாகச் சிரித்து மகிழும் குணம் கொண்டவர்கள். ஆனால் அது சிக்கலையும் ஏற்படுத்தலாம்.

ஒரு நிகழ்வுக்குப் பிறகு தனிப்பட்ட முறையில் சிரிப்பது பரவாயில்லை. ஆனால் தவறான தருணத்தில் சிரிப்பது, அனைவருக்கும் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இத்தகைய உணர்ச்சிகள் ஒரு கணத்தின் மன அழுத்தத்தைக் குறைக்க விரும்புவதற்கான மனிதர்களின் இயல்பான சைகையாக இருக்கலாம் என்று டாக்டர் டாங் கூறுகிறார்.

கனடிய பிரதமர் ஜீன் கிரெட்டியன் முறைப்படி பதவி ஏற்று, கையெழுத்திடும் விழாவில், பேனாவின் முனையை கழற்றி விட்டு, பின் சத்தமாக பதவி ஏற்றுகொண்ட போது, ராணி தமது சிரிப்பை அடக்க போராடினார் என்று டால்பி விபரிக்கிறார்.

"சில செயல்கள் தவறாக நடக்கும்போது, அவர் கோபப்படுவதை விட சிரிக்கவே செய்வார்." என்று சர் ஆண்டனி கூறுகிறார். 2003 ஆம் ஆண்டு வின்ட்சர் கோட்டையில் ஒரு இராணுவ மதிப்பாய்வின்போது, தேனீக்கள் கூட்டத்தால் குழப்பம் ஏற்பட, ராணி சிரித்துக் கொண்டிருப்பதை புகைப்படக் கலைஞர் கிறிஸ் யங் படம்பிடித்தார். "இது மனிதர்கள் இயல்பாக இருக்கும் தருணம் என்பதை நான் உணர்ந்தேன்," என்று யங் கூறினார்.

70 ஆண்டுகள் ஐக்கிய இராஜ்ஜியத்தின் தலைவராக இருந்து சேவையாற்றிய ராணி இரண்டாம் எலிசபெத் அவர்களின் இறுதி நிகழ்வுகள் நாளை பூரண அரச மரியாதையுடன் நடைபெற்று அவரது உடல் பூமியில் புதைக்கப்படவுள்ளது. இனி அவரின் அந்த அழகிய சிரிப்பை எப்போதும் காண முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

அசம்பாவிதங்களின் பருமன் பெரிதாகிவிடுகின்ற சந்தர்ப்பங்களில், பொலிஸ் வாகனங்கள், அம்புலன்ஸ் போன்றவையும் முகாமைச் சூழ்ந்து விடுவது வழக்கம்.

அன்று நடந்தது என்ன சம்பவம் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. முகாமை கார் நெருங்க நெருங்க. உள்ளே யாருக்குப் பிரச்சினையாக இருக்கும் என்று

றேன். உட்கார்ந்து கேட்டிருக்கிறேன். அந்த வலிகளை எனது உணர்வுகளும் முழுமையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒருபோதும் இந்த முட்கம்பி முகாம் ஓர் அகதியின் மரணச் செய்தியை எதிர்கொண்டதில்லை.

நீதனின் களைத்த கண்களும் பேசிய சொற்களும் மீண்டும் மீண்டும் வந்து முகத்தில் அறைந்தன.

உதைபந்தாட்டம் பார்க்கின்ற அந்த அல்பா கம்பவுண்ட் தூண் - தேநீருடன் நடக்கின்ற உதை பந்தாட்ட மைதானத் தடம் - அவன் பொங்கிய இடம் -எல்லாத் திசைகளிலும் ஒரு புகாராக நெளிந்தான.

முகாம் முழுதாக விடியவில்லை. யாரும் இன்னும் எழுந்து கொள்ளவில்லை. எழுந்த பிறகு. முகாமின் நிலை என்னவாகும்... எல்லோருக்கும் விருப்பமான ஓர் அகதியின்

பங்குகொள்கிறோம். அவர்களைப் பாதுகாக்கிறோம் என்ற திருப்தியில் திரிந்த மனம். இன்று எல்லாவற்றையும் களைந்துவிட்டு. இந்த முகாம் அகதிகள் அத்தனை பேருக்கும் முன்னால் அம்மணமாக நிற்பதுபோல உணர்ந்தது.

பெரும் போராட்டத்திலிருந்து தவறி. பெரும் கடல் பயண மொன்றில் உயிர் தப்பி. சகல வசதிகளும் நிறைந்த முகாமுக்கு வந்தவனை. எவ்வளவு அழுத்தங்களால் நிறைத்துக் கொன்றுவிட்டோம்...

நீதனின் இதயத்தை எந்தக் காரணம் இறுக்கிப் பிடித்து பலியெடுத்தது என்று யாருக்கும் தெரியாதுதான் என்றாலும். அந்த பலிக்குக் கூட்டுப்பொறுப்பேற்க வேண்டியவர்களாக எல்லோரும் வரிசையில் நிற்கிறோம் என்பதை மறுக்க முடியாது.

**பெரும் போராட்டத்திலிருந்து தவறி, பெரும் கடல் பயண மொன்றில் உயிர் தப்பி, சகல வசதிகளும் நிறைந்த முகாமுக்கு வந்தவனை, எவ்வளவு அழுத்தங்களால் நிறைத்துக் கொன்றுவிட்டோம்... நீதனின் இதயத்தை எந்தக் காரணம் இறுக்கிப் பிடித்து பலியெடுத்தது என்று யாருக்கும் தெரியாதுதான்.**

## வலி சொல்லும் தொடர்... 49

ஒவ்வோர் அகதியின் முகத்தையும் தாயக்கட்டைபோல உருட்டி உருட்டி யோசித்துப் பார்த்தேன்.

ஆனால். முதல்நாள் என்னோடு பேசியபோது. அவன் ஓரளவுக்குத் தன்னளவில் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.

ஒரு பக்கம் குடும்பம். குழந்தைகள்.

மறுபக்கம் ராதா. தலைக்கு மேல், அவுஸ்திரேலியப் புலனாய்வுப் பிரிவு என்று அமிழ்ந்து கிடந்தவனுக்கு. கீற்றளவு ஒளி கிடைத்துவிட்டதாகத்தான் நம்பினான். நானும் நம்பினேன்.

பதறிய கண்களோடு வாசல் ஏறிய மாத்திரத்திலேயே. முகாம் அறைகளுக்கான திறப்பு மற்றும் ரேடியோ கருவியை எடுத்து மேசையில் வைத்த வரவேற்பு உத்தியோகத்தர் ஸ்டெப்னி. "நீதன் பாஸ்டு எவே லாஸ்ட் நைட்" என்றாள்.

கசங்கிய முட்செடியொன்று என் உடலுக்குள் திடீரென்று விரிந்து கொண்டதுபோல எல்லாத் தசைகளிலும் அவள் சொன்ன வார்த்தை குத்திக் கிழித்தது.

என் உதடுகள் உலர்ந்து உறைந்தன. செவிகளுக்கு அருகில் தீ மூட்டிவிட்டது போன்று அனல் கொதித்தது.

இந்த முகாமில் எத்தனையோ அகதிகள் எத்தனையோ வடிவங்களில் துயரங்களைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்களின் அனுபவங்களை நானும் உணர்ந்திருக்கி

வெளியில் காண்பித்துக்கொள்ள முடியாத இறுக்கம் எனக்குள் பெரும் வாதையாக மனதைப் பிசைந்தது.

அல்பா கம்பவுண்டுக்குள் நுழைந்தேன். சப்பாத்தை மீறிக் கால் வழியாக குளிர் நுழைந்தது போல, உடல் உதறியது. ஏதோவொரு மூலையில் நின்று "அண்ணே..." என்றவாறு நீதன் வந்துவிடப் போகிறான் என்ற நம்பிக்கையில் கண்கள். அலைந்தன.

முதல் நாளிரவு பணி செய்தவர்கள் அனைவரும் ஓரளவுக்கு வெளியேறிவிட்டார்கள். பொறுப்பதிகாரிகள் அனைவரும் பொலிஸாருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் முக்கியச் சந்திப்பிலிருந்தார்கள். குடிவரவு அதிகாரிகள் சிலர் அந்த அறைக்குள்ளிருந்து வெளியேறுவதும் தமது அலுவலகத்துக்குச் சென்று சில கோப்புக்களுடன் உள்ளே போவதுமாயிருந்தார்கள்.

அல்பா கம்பவுண்டுக்கு வெளியே வந்து நின்று நானும் நீதனும் முதல்நாள் பேசிவிட்டு அகன்ற தகரக் கொட்டகையைப் பார்த்தேன். சிதையாக எழு தீயில் எம் உரையாடல்கள் உருகி விழுவது போல் தெரிந்தது.

ஒரே இடத்தில் நின்றுகொண்டிருந்தால். ஒருவேளை நான் நிலை குலைந்து விழுந்து விடக்கூடும் என்பதாக உணர்ந்தேன். ஜீரணிக்க முடியாத சாவும் அந்தச் செய்தியும் என்னை அந்த முகாம் நிலத்தில் விழுத்தி விழுத்தி எழுப்புவது போலிருந்தது.

நீதன் கடைசியாக வெற்றுத் தேநீர் குவளையை எறிந்த குப்பைத் தொட்டி சாதுவாகச் சாய்ந்து நின்று




இழப்பு இங்கு என்ன செய்யும்?

எதையுமே நினைத்துக்கொள்ள முடியாமல் வாசலுக்கு நடந்தேன். என்னைச் சுற்றி அதே அதிர்ச்சியுடன் பல உத்தியோகத்தர்கள் தங்களுக்குள் பல கதைகள் பேசினார்கள். ஒருவருடனும் என்னால் முகம் கொடுத்து உரையாட முடியவில்லை. நான் உட்பட பார்ப்பவர்கள் எல்லோரும் ஒருவகையில் நீதனின் சாவுக்குக் காரணமாகிவிட்டோமோ என்ற எரிச்சல் புரையேறிக் கொண்டிருந்தது.

இந்தத் தேசம் மனித உரிமை. மாண்பு. மதிப்பு என்றெல்லாம் அழகான கலைச்சொற்களை அள்ளி அள்ளி வீசிக்கொண்டு திரிவதில் என்ன பயன்?

இடுப்பிலிருந்த சாவிக்கொத்தை எடுத்து சுவரில் ஓங்கிக் குத்திவிடலாமா என்றிருந்தது.

அதற்குமேல் அந்த நிலத்தில் நிற்க முடியவில்லை. முகாமின் சுவர்கள் கூட என்னைக் குற்றவாளியைப்போல மிரட்டுவதாக உணர்ந்தேன்.

நேற்றுவரை இங்கு யாருக்கோ உதவி செய்கிறோம், அவர் துயரில்

அன்று என்னால் வேலை செய்ய முடியவில்லை. வாசலுக்கு வந்த திறப்புகளையும் ரேடியோவையும் திருப்பிக்கொடுத்தேன். ஸ்டெப்னி ஓரளவுக்கு அதை எதிர்பார்த்தவள்போல. அனைத்தையும் திருப்பி எடுத்து வைத்துக்கொண்டாள்.

வெளியில் வெயில் பரவியிருந்தது. சந்திப்பு முடிந்து ஸ்ருவேர்ட் சிகரெட்டோடு நின்றுகொண்டிருந்தான். சாவுக்கான கடைசிச் செய்தியை என்னிடம் ஒப்படைத்துவிட்டுப்போனதுபோல அவன் என்னிடம் நீதன் பற்றிச் சொல்லியிருந்தான்.

அவன் குறிப்பாக நீதனில் எதையோ கணித்திருந்தான். அதை நான் என்னால் இயன்ற அளவு நீதனுடன் பேசித்தானிருந்தேன். ஒரு மாரடைப்பு அவனுக்குள் விதியாக இறங்கி. உயிரை உருவிச் சென்றுவிடும் என்று யார் எதிர்பார்த்தார்?

ஸ்ருவேர்ட்டுடன் பேசுவதற்கு என்னிடம் எந்த வார்த்தையும் இருக்கவில்லை. காரை நோக்கி நடந்தேன்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகையிலையே போயிலையே

புகையிலையே போ இலையே போயிலையே
பகையிலையே எமனுக்கும் ஒரு பயமிலையே
பொய்யிலையே நீ போதையென்பதில்
பொய்யுமிலையே

செய்கைக்குத் தடை வந்தால் விட்டுவிடு
கைகளுக்கு நட்டம் வரினும் உடன்பட்டுவிடு

அட்டமத்துச் சனியன்று புகையிலையை எட்டவிடு
இட்டப்படி வாழலாம் புண்ணியத்தைக் கிட்டவிடு

நட்டவன் மடியில் முடிச்சுகள் பணக்கட்டின்
தொட்டவன் தேகம் முழுவதிலும் "நிக்கொட்டின்"

பாவத்தைச் சிப்பம் சிப்பமாய்க் கட்டாதே
கோபத்தால் வம்சம் உன்னைத் திட்டாதே

கொடுப்பில் வைத்து கடிந்து மகிழ்ந்தவன்
கடுப்பில் இன்று காறி உமிழ்கின்றான்

உதட்டில் சொருகிப் புகையை இழுத்தவன்
உடலைப் பாயில்
பலநாள் விழுத்துகிறான்

"வின்வின்" கொள்கை சரியென வழிநடந்தால்
விண்ணில் இருந்து
அருள்மழை பொழிந்திடுவான்.

**மகேசன் கஜேந்திரன்**

# கொய்யா சொல்வது மெய்யா!

ஒப்பிலாத துரித உணவு
அப்பிளை விட அதிக சத்துக்கள்
தப்பாமல் விட்டமின் சி அதிகம்
அப்படியே பி6 ம் அதிகம்
எப்பவும் வாங்கலாம்
எங்கேயும் வாங்கலாம்
கல்சியம் ஒரு விகிதம்
இலேசில் அழுகாத பழம்
மாசில்லா பசளை போதும்
இரண்டு வருடத்தில்
பழம் தரும் மரம்
ஊரார் மெச்சும் பழம்



**சி. குமாரலிங்கம்**
**நல்லூர்.**

# விரைந்து நீயும் ஆகிவிடு.....

முழு நாடுமே முட்டி மோதும் வேளை
மக்களின் தாங்கவொணா அல்லல்களை
ஏறெடுத்தும் ஏனென்று பார்க்காதிருக்க
நயனங்கள் இருந்தும் ஊமை விழிகள்
பெற்றிடவும் பாசம் அற்ற உளங்கொண்டிடவும்
விரைந்து நீயும் ஆகிவிடு......

நாடாளவும் சென்றிடலாம் உறுப்பினர்
மந்திரியும் ஆகிடலாம் ஆனால்
அடிதடி, வம்பு, கட்டப் பஞ்சாயத்து
அனல் கொண்ட வீரவசனங்களை அள்ளிவிடும்
திறமை அச்சுறுத்தும் ஆற்றல் உண்டா?
விரைந்து நீயும் ஆகிவிடு.....

கோடிகோடியாய் சொத்துக்கள் பெற
பணம் மூட்டை மூட்டையாக ஏராளம்
சம்பாதிக்கவும் கோடீஸ்வரர் ஆகிட
ஆறு வருடத்திற்கு ஒருமுறை
அப்பாவி வேடமிடத் தெரிந்தால்
விரைந்து நீயும் ஆகிவிடு....

விலைவாசி பற்றியோ பொருட்கள்
பற்றாக்குறை பற்றியோ வேண்டாம்
சிந்தனை தக்க தருணம் உண்டெனில்
பற்பல விதங்களில் பதுக்கல் செய்திட
மாட மாளிகைகள் பல பெற்றிடவும்
நீயும் விரைந்து ஆகிவிடு...

பற்பல கொலைகள் அச்சுறுத்தல்
கடத்தல் பல செய்தாலும் அதுவும்
உன்றன் மேலதிக திறமையே
அதிக படிப்பறிவும் வேண்டா
பட்டப்படிப்பும் அதிகம் வேண்டா எனவே
விரைந்து நீயும் ஆகிவிடு.....

**மல்லையம்பதி சரவணன்**

# மௌனத்தின் தேடல்- 575



## பூமித்தாயின்...

வீடுமில்லை இதற்கு
வாசலுமில்லை
ஊருமில்லை எனக்கு உறவுமில்லை
பேருமில்லை
என்னை பெற்றதாயுமில்லை
யாருமில்லை என்றாலும்
நான் வாழ
நம் பூமித்தாயின் மடி உண்டு
**பி.யதுர்சன்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

## தட்டும் குவளையும்

பட்டினத்தாரும்
பத்திரக்கிரியாரும்
கோவணவாண்டிகள் இருவரில்
பட்டினத்தார்தான்
சொத்துக்காரன்
அவர் சொத்து பிச்சா பாத்திரம்
என் சொத்து தட்டும் குவளையும்
**பி.மதுஷ்சன்,**
**தையிட்டி.**

## உண்டி கிடைப்பதரிது

நாளெல்லாம் பசியுடன் துடிக்கும்
எம் வயிற்றுக்கு
மூவேளை உணவோ!
ஊட்டச் சத்தோ!
ஆரோக்கிய வாழ்வோ!
அறியோம் அதையெல்லாம்
ஆனால் வேளை எதில் எவ்விடத்தில்
உணவெது கிடைத்தாலும்
அமிர்தம் தானெமக்கது
**சி.இ.அன்புதுரை**
**சம்மட்டி ஓலை, மானிப்பாய்.**

## தலைவிதி

அமுதூட்ட ஆளில்லை;
கதை கூற பாட்டியில்லை;
தனி வீட்டில் அமர்ந்திருந்து;
தானே அள்ளி உண்ணுகின்றான்.
தனி மரமாகிய தலைவிதியின்
தாண்டவத்தை எண்ணி......!
**ஆர்.கே.வரன், நயினையூரான்.**

## வறுமை

உலக நாடுகள் போரில் மூழ்க
கொடிய நோய்கள்
உலகை வாட்ட
பொருளாதாரம் வீழ்ச்சி அடைய
உணவு இல்லாமல்
வாடிப்போனாயோ?
**கும்பவாழியான்**
**உடுப்பிட்டி**

# மௌனத்தின் தேடல்- 576



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

## தர்மம் தளைக்க

உணவும் உடையும் உறையுளும்
உயிர் வாழ் முறைமையும் கோடனு
கோடி பெறுதி அந்தஸ்தில் நினைக்கும்
கோடீஸ்வரர்காம் குழந்தையின் பசியை
எவருணர்வாரோ தாயை இழந்த
தவிப்பறிவாரோ தருவேளை தன்னில்
தார் மீக நெஞ்சால் சிறார் பசி
தணித்த தர்மவானே வாழிய நீடு!
**வைகதன், கொக்குவில்.**

## மகிழ்ச்சி

குடிசையில் அமர்ந்தாலும் உல்லாசமாய் அமர்ந்திருந்து
உவகையுடன் உண்ணுகின்றான்
உலகத்தின் பணக்காரன்!
**இ.ரிஷிதா, நயினாதீவு-8**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 32

# கடல் புறா

## நடனமாடினாள்!

வண்ணமதி வெள்ளிக் கிண்ணமென பின்னணி வானத்தில் எழுந்து நிற்க, அதன் வெண்ணொளியிலும் மறைய மறுத்த தாரகைகளில் சில கண் சிமிட்டி மண்டபத்தை உற்று நோக்க, வைத்த கண் வாங்காத மனிதக் கடல் மதிமயங்க, தேவலோக ரம்பைபோல் மேடைமீது பறந்து வந்த மஞ்சளழகி தலை தாழ்த்தி அந்தக் கூட்டத்தை வணங்கிக் கொண்டே, தன் மஞ்சள் நிற மங்களப் பாதங்களை மெல்ல மெல்லத் தட்டித் தட்டிச் சதங்கையொலி ஜல்ஜல் என்று எங்கும் ஒலிபரப்ப சிலம்பிலிருந்த முத்துப்பரல்கள் குலுங்கிக் குலுங்கி அதற்கு ஆதார சுருதி கூட்ட, தனது நடனத்தைத் துவங்கினாள்.

திக்குகள் நிர்மலாயிருந்தன. எதிரேயிருந்த மனிதக் கடலுக்குப் புறம்பேயிருந்த அலை கடல் கூட தனது அலைகளின் சத்தத்தைப் பெரிதும் அடக்கிக்கொண்டு அந்த வண்ண மயிலின் கால் தாளத்துக்குச் சரியாக அலைகளைத் தரைமீது 'சர்சர்'ரென்று தாக்கிக் கொண்டிருந்தது. அவள் மென்மையான பாதத்தின் அசைவினால் ஏற்பட்ட சதங்கை, சிலம்பு இவற்றின் இன்னிசை ஒலிகள் மட்டும் பின்னணி வாத்தியங்களின் இலேசான ஸ்வர ஜாலங்களுடன் இழைந்து இழைந்து மேலெழுந்து நாதப்பிரம்மத்தை எங்கும் பரப்பத் தொடங்கின. மஞ்சளழகியின் நடனத்தின் சொகுசை இன்பத்தை, சற்றுப் பலமாகத் தொட்டாலும் கெட்டுவிடக்கூடிய புஷ்ப இதழ்கள் போன்ற பாதவிரல்களின் மென்மைத் தன்மையை உணர்ந்து கொண்ட பின்னணி வாத்தியங்கள் சுகத்தின் இருப்பிடமாக மிக மெதுவாகச் சப்தித்தன.


காமேலான் என்று சொர்ணத் தீவினர் அழைத்து வந்த அந்த நடன வாத்தியக் கோஷ்டியில் பெரும் தாளங்கள் இருந்தன. மிருதங்கத்தை விடப் பெரிதும் பலமானவையுமான சரும வாத்தியுங்கள் இருந்தன. புல்லாங்குழல் இல்லா விட்டாலும் அதைப் போல் துவாரங்களையுடைய நீளக் குழல் வாத்தியங்கள் இருந்தன.

இவையனைத்துக்கும் தலைமை வகித்து வழி காட்ட ஒற்றைத் தந்தி வாத்திய மொன்றும் இருந்தது. இத்தனை நாள் தோல் வாத்தியங்கள் சேர்ந்தும் அவற்றைக் கையாண்ட பின்னணி இசைப்பாளர்கள் அவற்றிலிருந்து கடுமை கடுகளவும் இல்லாத சுகமான நாதங்களையே எழுப்பினார்கள். 'சொகசுகா மிருதங்கதாளமு' என்று பிற்காலத்தில், தியாகய்யர் சங்கீதத்தில் சுகத்தின் அவசியத்தைக் குறிப்பிட்டுத் தாளமும் சரும வாத்தியங்களுங்கூட சொகுசாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியதற்கு முற்கால அத்தாட்சியாக விளங்கின அந்தப் பின்னணி வாத்தியங்கள்.

மஞ்சளழகி மேடைமீது பறந்து வருமுன்பே அங்கு தோன்றி விட்ட பின்னணி வாத்தியக்காரர்கள், பெண் குரலில் அதிக சுருதிக்குத்தக்க சுருதி அமைத்து மேல் ஷட்ஜத்தில் பாதி வாத்தியங்களையும் நேர் கீழ் ஷட்ஜத்தில் மற்றப் பாதி வாத்தியங்களையும் சுருதி கூட்டி ஒலிக்க விட்டதால் கீழே 'பூம்பூம்' என்ற சரும வாத்தியங்களின் ஆதார நாதமும் மேலே தந்தி வாத்தியம், நீள் குழல் வாத்தியங்கள், தாள வாத்தியங்கள் இவற்றின் கிண்கிண் கிணிரீங்கார சப்தமும் கலந்து கிளம்பி நானாவித ஸ்வர ஜலாங்கள் கடற்கரை பூராவையும் ஆக்கிரமித்துக் கொண்டன. அப்படி எங்கும் பரவி நின்ற நாதவெள்ளத்தின் அபூர்வ சக்தியால் இழுக்கப்பட்ட தேவ ரம்பையென மேடைமீது மஞ்சளழகி வந்தாள். வணங்கினாள். பாதசர ஒலிகளைக் கிளப்பினாள்.

(தொடரும்...)

# உலகின் தொழில் திறன் அதிசயங்கள் பகுதி -2



கிரேட் வெஸ்டர்ன் ரயில்வே பணி முடித்த பிறகு புருனெல் ஒரு மெகா கப்பல் கட்டுவதற்கான வரைபடத்தை உருவாக்கினார். 1852 ஆம் ஆண்டு கிரேட் எக்ஸிபிஷன் என்கின்ற பெயரில் அன்றைய தினம் நடைபெற்ற பொறியியல் கண்காட்சியில் கடல் வழிப் போக்குவரத்துத் துறையில் நிபுணராய் இருந்த ஜான் ஸ்காட் ரஸ்ஸல் என்பவரைச் சந்தித்து தனது திட்டம் குறித்து விளக்கினார்.

ஜான் ரஸ்ஸல் அதற்கு 20 000 தொன் எடை கொண்டதாக அந்த கப்பல் இருக்க வேண்டும் என்றும் 8500 குதிரை சக்தி திறன் (6300 கி.வாட்) கொண்ட இயந்திரங்கள் தேவை என்றும் கணக்கிட்டுக் கூறினார். புருனெல் உருவாக்கிய வரைபடம் ரஸ்ஸலின் கணக்கீட்டை ஒத்ததாக இருந்தது.

அந்தக் கப்பலில் பயன்படுத்தப்பட வேண்டிய ஆணிகள், குறிப்பாக குறைந்த முகத்துவாரம் உடைய கல்கத்தாவின் ஹூக்ளி ஆற்றிலும் மிதந்து செல்லும் அளவு நீர்வழிச் சக்கரங்களை பொருத்த வேண்டும் என்பது போன்ற நுட்பமான விபரங்களோடு விரிவாக அமைந்திருந்தது புருனெல்லின் திட்ட வரைபடம்.

இருவரும் சேர்ந்து ஈஸ்டர்ன் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை திட்ட வரைபடத்தோடு அணுகினார்கள். கம்பெனி நிர்வாகிகள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு இதற்கான நிதி மானிய உதவிக்காக இங்கிலாந்தின் தபால் துறையை அணுகினர்.

இத்திட்டம் ஏற்கப்பட்டாலும் 1851 ஆம் வருடம் தான் தொடங்கப்பட்ட ஈஸ்டன் கம்பெனிக்கு தருவதை விட பெனின்சுலர் அண்ட் ஓரியண்டல் நேவிகேஷன் கம்பெனிக்கு தருவதுதான் சரியாக இருக்கும் என முடிவு செய்து அந்த நிறுவனத்துக்கே தந்து விட்டனர்.

திட்டப்பணிகளுக்காக கூடிய ஓரியண்டல் கம்பெனி நிர்வாக இயக்குநர்கள் திட்ட பொறுப்புகளை புருனெல்லிடமே ஒப்படைத்தனர். உடன் ஜான் ஸ்காட் ரஸ்ஸலும் பணியாற்ற அனுமதி அளிக்கப்பட்டது.

1854 ஆம் ஆண்டு மே 1 ஆம் திகதி முறையாக தொடங்கப்பட்ட கப்பல் கட்டுமானப் பணி 1858 இல் தான் முடிவுற்றது. இடையில் ரஸ்ஸலுக்கும் நிதிஉதவி செய்த வங்கி நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக பணிகள் தாமதப்பட்டன.

எஸ்.எஸ்.கிரேட் ஈஸ்டர்ன் கப்பல் கட்டும் தளம் திடீரென தீப்பிடித்து எரிந்து பல இலட்ச ரூபாய் பொருட்கள் சேதமடைந்து நஷ்டத்தை ஏற்படுத்தின.

கப்பல் கட்டும் தொழில் நுட்பத்தில் அவ்வப் பொழுது புருனெல் செய்த மாறுதல்கள் ஒப்பந்த வரை படத்தில் இல்லாததால் ஜான் ஸ்காட் அதிகம் செலவாகிறது என ஒரு கட்டத்தில் வேலை களை நிறுத்திவிட்டார்.

விரைவில் முடிக்க வேண்டும் என்று தரப்பட்ட அழுத்தம் காரணமாக அவசரம் அவசரமாக நடத்தப்பட்ட சோதனை ஓட்டம் மூன்று முறை தோல்வியில் முடிந்தது. என்றாலும் எல்லாத் தடைகளையும் தாண்டி 1858 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி நீரில் இறக்கப்பட்டது.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

308

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நோக்கங்களை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு கால்தடங்களும் வெற்றிக்கான பதிவுகளே

ஒவ்வொரு தடவையும் கோபப் படும் பொழுது நாம் தோற்றுவிடு கிறோம். கோபத்தை ஏற்படுத்திய அந்தச் சூழ்நிலை எம்மை வெற்றி கொள்கிறது. கோபமான நிலையில் எமது புத்தி மங்கி சாதுரியம் குன்றி மனதாலும் உடலாலும் பிழையான தீர்மானங்கள் எடுக்கும் ஒரு பலவீன மான நிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

வாழ்க்கை உண்மையில் எளி மையானது. நாமே அதனை சிக்கல் கள் நிறைந்ததாக மாற்றிக்கொள் கிறோம். சிக்கல்களை ஏற்படுத்து வதற்கு எமது வாதிடும் குணாதிசய மும் கோபப்படும் தன்மையுமே பிரதானமான காரணமாக அமை கின்றது.

ஒரு விடயத்தை உணரக் கூடிய திறமைசாலிகள் என்று நாம் கருது பவர்களுடன் மட்டும் வாதிடுவோம். எமது கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லுவோம். அவ்வாறானவர்கள் அல்ல என நாம் கருதுபவர்களுடன் வாதிட்டு நாமும் காயப்பட்டு மற்ற வர்களையும் காயப்படுத்தும் முயற்சி எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அமைதியாக இருப்பது ஆமோ திப்பது என்று அர்த்தப்படாது. பேசிப் பயன்தராது என்று நினைக்கின்ற பொழுது அல்லது உண்மை துலங்க காலம் கனிய வேண்டும் என்ற நிலை இருக்கும்பொழுது அமைதி சிலசமயம் மிகப்பொருத்தமான ஆயு தமாக இருக்கலாம்.

எமது இலக்கை நோக்கிய பாதை யில் நின்று குரைக்கும் ஒவ்வொரு நாய்களுக்கும் கல்லெறிய முற்ப டுவோமாயின் எமது பயணம் முற்றுப் பெறமாட்டாது என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதே போலத் தான் வாழ்வில் ஏற்படும் இடையூறுகள் ஒவ்வொன்றுடனும் மோத முற்படு வோமாயின் எமது இலக்கை அடைய முடியாது.

இன்று ஒருவன் பலம் பொருந் தியவன் போலத்தோற்றப்படலாம். ஆனால் காலச்சக்கரத்தின் கரங்கள் மிகமிகப் பலமானது. காலம் மாற, காலம் கனிய கனகாலம் ஆகாது.

விடயங்களை அமைதியாகவும் உணர்வு பூர்வமாகவும் அணுக பழ கிக் கொள்ளும் பயிற்சி பயனுடைய தாக அமையும். அந்தப்பயிற்சி அமை தியான முன்னோக்கிய பயணத்திற்கு உறுதுணையாக அமையும்.

எமது பயணத்தின்பொழுது எம்மீது கல்லெறிகள் விழலாம். அவற்றை எடுத்து திருப்பி எறிந்து அந்தக் கற் களை வீணடிப்பது புத்திசாதுரியம் ஆகாது. அந்தக் கற்களைக் கொண்டே எமது பாதையை செப்பனிட முயலு வோம். எமது பாதைக்கு உரம்சேர்ப்போம்.

எந்தப்பாதையில் பயணிப்பது என்ற தடுமாற்றம் தேவை அற்றது. மன உறுதியும் மனச்சாட்சியுடன் கூடிய உழைப்பும் இருக்குமாயின் நாம் பய ணித்துக் கொண்டிருக்கும் பாதையே சரியான பாதையாக அமையும்.

எமது பயணத்தின் பொழுது காலம் பலவற்றை எமக்கு கற்றுத் தரும். நாம் எப்பொழுதும் கற்பதை நிறுத்தி விட முடியாது. அதுவே எமது முன்னேற் றத்தின் உயிர் மூச்சு. இது புத்தகக் கல்வி என்று அர்த்தப்படாது. ஏமாற் றங்கள், இழப்புகள், வறுமை, ஏன் பசிகூட எமக்கு பலவற்றை கற்றுத் தரும். எம்மை பக்குவப்படுத்தும்.

எமது இலக்கை அடைய அதிக காலம் எடுப்பது தோல்வி என்று ஆகி விடாது. எமது உண்மையான நோக் கங்களை நோக்கி அமைதியாக எடுத்து வைக்கும் ஒவ்வொரு கால்தடங்களும் வெற்றிக்கான பதிவுகளே. வாழ்க்கை குறுகியது. இந்தக் குறுகிய வெளியில் பகைவளர்த்து நேரத்தை வீணடிப்பது வெற்றிக்கு இடையூறாக அமையும்.

எம்மிடம் இருந்தவற்றை நாம் இழந்து விடும் பொழுது வேதனைப் படுகிறோம். கோபப்படுகிறோம். மன விரக்தி அடைந்து தோல்வி மனோ நிலைக்கு ஆட்படுகிறோம். ஆனால் அவை எம்மிடம் இருந்த காலத்தில் அவற்றை எண்ணி மகிழ்ச்சி அடைந் திருக்கிறோமா என்று எண்ணிப் பார்ப்போமாக இருந்தால் அந்தக் காலத்திலே அவை சம்பந்தமாக நாம் அக்கறை அற்றவர்களாக இருந்தி ருப்பது புலப்படும்.

எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சி அடையத்தெரியாமல் அவ ற்றை இழக்கும்பொழுது மட்டும் வேதனைப்படும் மனநிலை விசித்தி ரமானது. எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சியும் திருப்தியும் அடையும் மனநிலையை வளர்த்துக் கொள்ளும் பயிற்சி வெற்றிக்கு வித் திடும்.

நாம் உணர்ச்சி வசப்பட்டதாலோ தவறாக வழிநடத்தப்பட்டதாலோ எடுத்த தவறான முடிவுகளை சரி செய்து கொள்வது தோல்வி என்று அர்த்தப்படாது. சிலரை தவறாகப் புரிந்து கொண்டு பிரிந்து விடுகிறோம். வேறு சில தவறானவர்களை சரியாகப் புரிந்து கொள்ளாததால் அவர்களுடன் நெருங்கி அதன் காரணமாக நொந்து போகிறோம். இவை காலம் எமக்கு கற்றுக் கொடுக்கும் பாடங்கள்.

எமது துயர்களை நாமே எமது கைகளால் துடைத்து மற்றவர்களுக் கும் கைகொடுத்து நம்பிக்கை ஒளி யில் வெற்றி இலக்கை நோக்கி பய ணித்து ஆக வேண்டி இருக்கிறது. எமது அறிவு மங்கிவிடவில்லை. சிந்தனை ஓட்டங்கள் சிதறி விட வில்லை. மனதினதும் உடலினதும் பலம் அற்றுப்போகவில்லை. அதற் காக சந்தோசப்படுவோம்.


**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

---

தெருக்களிலே எமது வாகனங் களில் இருந்து எழுப்பப்படும் கோன் ஒலிகளில் 95 சதவீதமானவை அநாவசியமாக எழுப்பப்படுகின் றன.

நல்ல முறையில் வாகனத்தைக் கட்டுப்படுத்தும் திறனும் மன அமைதியும் சுய நலமற்ற மனப பாங்கும் இருந்தால் நாம் தேவை யற்ற கோன்களை தவிர்த்துக் கொள் ளலாம்.

எமது கோபத்தையும் மனப்பதற் றத்தையும் அவசரத்தன்மையை



யும் வெளிக்காட்ட சில சமயம் கோன் அடித்தபடியே செல் கின்றோம். ஒவ்வொரு தடவையும் கோனில் கை வைக்க முன்பு எமது மனதில் கை வைத்துப்பார்ப்போம்.

நிச்சயமாக எம்மால் அநாவசிய கோன்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இவ்வாறான சத்தங்களினால் எமது சுற்றாடலில் அமைதித் தன்மை குலையும் பொழுது இது மனிதர்களில் பல்வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

இத்தாக்கங்களினால் ஏற்படும் விளைவுக ளில் முக்கியமானவையாக மன அழுத்தம், மனச் சோர்வு, ஞாபக மறதி, நித்திரைக்குழப்பம், உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், மாரடைப்பு, கேட்கும்திறன் குறைவடைதல், கல்வி கற்றல் திறன் குறைவடைதல், இலகுவில் நோய்வாய்ப் படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**நித்திலம்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 வயதில் ஓய்வு என்பது அரசியல் தலைவர்களுக்கு இல்லையா?

## மகிந்த தேசப்பிரிய கேள்வி

(கொழும்பு)

நாட்டில் இன்று ஜனநாயகம் இல்லை. அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் இன்மையே இதற்கான பிரதான காரணியாகும்.

அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு வரம்பற்ற அதிகாரம் காணப்படுகின்றமை இதில் பெரும்பங்கினை வகிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிறந்த அறிவுள்ள இளைஞர்கள் காணப்படுகின்ற போதிலும் அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை.

ஆனால் மறுபுறம் வயதானவர்கள் தொழிலிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

60 வயதில் அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற வேண்டுமெனில், அந்த வயதைக் கடந்த அரசியல்வாதிகள் ஏன் இன்னும் ஓய்வு பெறவில்லை என்பது தற்போதைய பிரபல கோஷமாக வுள்ளது.

இளைஞர்களுக்கு அதிகாரங்கள் கிடைக்கப் பெறாமலுள்ளமைக்கான காரணம் என்ன? அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் இன்மையே இதற்கான பிரதான காரணியாகும்.



கட்சிகள் ஜனநாயகமுடையவையாக மாற்றமடையும் போது, நாட்டிலும் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும். வாக்களிப்பது உங்களது குரல், உரிமை எனவே வந்து வாக்களியுங்கள் என்று பிரசாரம் செய்பவர்கள், மறு புறம் ஏதேனும் செய்தால் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என்றும் எச்சரிக்கின்றனர்.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளிட்ட இளைஞர் யுவதிகளுக்கு ஆதரவாகவே நான் செயற்பட்டேன் என்பதை பலரும் அறிவார்கள்.

ஆனால், வேட்புமனுக்களை பொறுப்பேற்றவன் நான் எனக் கூறி, எனது வீட்டையும் தாக்குவதற்கும் சிலர் வருகை தந்தனர் என அவர் தெரிவித்தார். (நி)

# கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில், 24,000 இற்கும் அதிகமான கைதிகள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்களில் சுமார் 7,500 பேர் போதைப்பொருள் குறித்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் 13 ஆயிரம் கைதிகளையே தடுத்து வைக்க முடியும் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கை மாணவர்கள் 7 பேர் மீட்கப்பட்டுள்ளனர்

## உக்ரைன் ஜனாதிபதி

(கீவ்)

கார்கிவ் பகுதியில் ரஷ்யப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மாணவர்கள் 7 பேர் மீட்கப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் ரஷ்யப் படையினரால் கார்கிவ் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

கார்கிவ் பிராந்தியத்தின் சில பகுதிகளை விடுவித்த பின்னர் உக்ரைனியப் படைகளால் இலங்கையர்கள், குப்யான்ஸ்க் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

7 இலங்கையர்கள் மீட்கப்பட்டதாகவும் அவர்களுக்கு உரிய மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# பதில் நிதி அமைச்சராக சியம்பலாபிட்டிய நியமனம்

(கொழும்பு)

பதில் நிதி அமைச்சராக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார்.




பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் நுழைந்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய நிதி இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# டெங்கு நோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்தை விட இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.



இந்த வருடத்தின் 36 ஆவது வாரத் திற்குள் இலங்கையில் 55,012 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அந்த பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கடந்த ஆண்டு நிலவரப்படி இந்த எண்ணிக்கை 18,265 ஆக உள்ளது என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் நான்கு கொவிட் மரணங்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்தவர்களில் இரு பெண்கள் அடங்குவதாகவும் அவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: சூரி 7 செவ் 8 இல்<br>உயரம்: 6' 1"<br>தகைமை/தொழில்: BSc Civil Engineering பொறியியளாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/12959 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 4 சூரி 12 செவ் 9 இல்<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: BSc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/12979 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 39 சூரி 10 செவ் 9 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: A/L (சொந்தத்தொழில்)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12960 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மிருக சீரிடம் 3<br>கி.பா: 10 சூரி 6 செவ் 4 இல்<br>உயரம்: 163 cm<br>தகைமை/தொழில்: A/L எழுது வினைஞர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/12980 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: சூரி 7 செவ் 8 இல்<br>உயரம்: 6' 2"<br>தகைமை/தொழில்: A/L(தனியார் தொழில்) ஐரோப்பிய நாடு<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண் அரச தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12962 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>உயரம்: 5' 5"<br>கி.பா: 44 சூரி 2 செவ் 5 இல்<br>தகைமை/தொழில்: அழகுக்கலை (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/12981 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: சூரி 12 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: A/L சுவிஸ்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்துபெற்றவர்<br>தொ.இ: B/12963 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: சூரி 12 செவ் 3 இல்<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: HNDE Assent Engineer Civil<br>எதிர்பார்ப்பு: பொறியியளாளர் வங்கியாளர் அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/12983 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளால் புதைக்கப்பட்ட நகைகளைத் தேடி அகழ்வுப்பணி

## ஆரம்பித்த சில மணிநேரத்தில் இடைநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - இருபாலை டச்சு வீதியில் உள்ள வீடொன்றின் வளாகத்துக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் மற்றும் தங்க நகைகள் புதைக்கப்பட்டுள்ளதாக சந்தேகத்தில் அகழ்வுப் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் கோப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் இந்த அகழ்வுப் பணி நேற்று 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இருபாலை டச்சு வீதியில் உள்ள வீடொன்றின் வளாகத்துக்குள் தங்க நகைகள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து 6 பேர் அகழ்வுப் பணிக்கு தயாராகிய நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப் பட்டவர்களில் இராணுவத்தில் உள்ளவர்களும் அடங்கியிருந்தனர்.

இந்த நிலையில் கோப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வுப் பணி மதியம் 2 மணியளவில் இடைநிறுத்தப்பட்டது. இங்கு ஆயுதங்களோ நகைகளோ மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(நி-33-104)

# வவுனியாவில் ஆசிரியரை தாக்க முயற்சி அருகில் நின்ற மாணவன் காயம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு தனியார் கல்வி நிலையத்தில் ஆசிரியர் ஒருவரைத் தாக்க முற்பட்ட மாணவர்களினால் ஆசிரியருக்கு அருகில் நின்ற மாணவன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் தலையில் காயமடைந்த குறித்த மாணவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு முன்பாக ஒன்று கூடிய மாணவர்கள் அங்கு நின்ற மாணவிகளுக்கு தொல்லை கொடுக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

இதை அங்கு நின்ற ஆசிரியர் அவதானித்துள்ளதுடன் தனது கல்வி நிலையத்துடன் தொடர்பு அற்ற மாணவர்களை அங்கிருந்து செல்லுமாறும் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டாம் என்று எச்சரித்த போது திடீரென்று தலைக் கவசத்துடன் நின்ற மாணவன் ஒருவர் குறித்த ஆசிரியரை இலக்கு வைத்து தாக்க முற்பட்டபோது அருகில் நின்ற மாணவன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 19வயது மாணவன் காயமடைந்து மருத்துவ மனையில் விபத்துப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் குறித்து காயமடைந்த மாணவனின் பெற்றோர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நி-299)

# மன்னார், வவுனியா உள்ளிட்ட ஏழு நகரசபைகள் தரமுயர்வு

(மன்னார்)

மன்னார், வவுனியா, திருகோணமலை உள்ளிட்ட 7 நகரசபைகளை மாநகரசபைகளாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான முதல்கட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டின் அனைத்து மாவட்டங்களினதும் தலைநகரத்தை மாநகரசபையாக அறிவிக்கும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

வவுனியா, களுத்துறை, கேகாலை, புத்தளம், திருகோணமலை, கம்பஹா மற்றும் மன்னார் ஆகிய நகரசபைகள் இவ்வாறு மாநகரசபைகளாக தரம் உயர்த்தப்பட உள்ளன.

உள்ளூராட்சி மன்ற அமைச்சர்கள் என்ற வகையில் பிரதமர் தினேஸ் குணவர்த்தன சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டது.

மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் கீழ் மாநகரசபைகளுக்கு விசேட வரப்பிரசாதங்கள் கிடைக்கப் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# குழந்தையின் மருத்துவச் செலவுக்காக விசேட அதிரடிப்படையினரால் நிதியுதவி

(வவுனியா)

குழந்தையின் உயிர் காக்க விசேட அதிரடிப்படையினரால் பொலிஸார் ஒருவரிற்கு ஒரு தொகைப்பணம் கையளிக்கப்பட்டது.வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அனுராத பஸ்நாயக எனும் பொலிஸாரின் ஒன்றரை வயது குழந்தையின் மருத்துவச் செலவுக்காக ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய் வரை பணம் தேவைப்பட்டது.

இந்த நிலையில் இலங்கை ரீதியாக விசேட அதிரடிப்படையினரிடம் திரட்டப்பட்ட ஒரு தொகைப் பணத்தை நேற்று சனிக்கிழமை வவுனியா பொலிஸ் நிலையத்தில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முன்னிலையில் விசேட அதிரடிப்படை அதிகாரியினால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மீன்குஞ்சு உற்பத்தி தொட்டிகளை புனரமைக்க நடவடிக்கை

(தருமபுரம்)

வவுனிக்குளம் கிராமத்தில் கடந்த கால இடம்பெயர்வுகள் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி தொட்டிகளை புனரமைத்து பிரதேச மக்களுக்கு மேலதிக வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் நோக்கிலான களவிஜயம் ஒன்றினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் மேற்கொண்டார்.

இத்திட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில், வவுனிக்குளத்தில் மீன் பிடிப்பதை ஜீவனோபாயத் தொழிலாக கொண்ட சுமார் 120 குடும்பங்களுக்கு மேலதிக வருமானத்தினை பெற்றுக் கொள்ள முடியும் எனபதுடன், மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள குளங்களுக்கு தேவையான மீன்குஞ்சுகளையும் உற்பத்தி செய்ய முடியும். குறித்ததிட்டத்திற் கான முழுமையான திட்ட வரைபினை தயாரித்து சமர்ப்பிக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளை அவர்கேட்டுக்கொண்டார். (நி-316)

# சிறுவர்களுக்கான நூலகம் முல்லைத்தீவில் திறப்பு



(சாவகச்சேரி)

வடக்கு மாகாணத்தில் சிறுவர்களுக்கான நூலகம் அமைக்கும் செயற்றிட்டத்தினை 'ஒன்று கூடுவோம் இலங்கை அமைப்பு' அண்மையில் முல்லைத்தீவு இந்து புரத்தில் ஆரம்பித்து வைத்துள்ளது.

இவ்அமைப்பின்முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லக்சிதரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், பொலிஸ்உத்தியோகத்தர், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். (நி-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 300 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 300 | 300 | 280 | 340 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 300 |
| தக்காளி | 180 | 220 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 |
| கோவா | 400 | 380 | 450 | 480 |
| கரட் | 300 | 360 | 400 | 420 |
| பூசணி | 140 | 140 | 140 | 200 |
| புடோல் | 120 | 180 | 120 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 | 180 |
| பாகற்காய் | 400 | 800 | 200 | 800 |
| வெண்டிக்காய் | 160 | 200 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 190 | 200 | 300 |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 150 |
| லீக்ஸ் | 300 | 260 | 300 | 350 |
| பீற்றூட் | 200 | 180 | 180 | 280 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 700 | 400 |
| போஞ்சி | 550 | 600 | 700 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | — | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 350 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 350 | 400 |
| முள்ளங்கி | 120 | 180 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 40 |
| ஈரப்பலா | 140 | 80 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் எதை உறுதியாக நினைக்கிறானோ அதுவாகவே அவன் மாறிவிடுவான்.

– புனித பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வெறும் அறிக்கை விடுவதா ஆளுநரின் கடமை

வடக்கு மாகாண ஆளுநர் குறித்து பலத்த விமர்சனங்கள் உள்ளன.

எனினும் அவை அவரின் செவிகளுக்கு எட்டவில்லை என்பதையும் உணர முடிகிறது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் அர்ப்பணிப்போடு செயலாற்றிய அரச நிர்வாகிகளை அவர் இடமாற்றம் செய்தது மிகப் பெரும் த்வறு என்ற கருத்து பரவலாக உள்ளது.

அதாவது, வடக்கு மாகாண ஆளுநர் எழுந்தமானமாகச் செயற்படுகிறார். தனது பதவிக்கான அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றாரே தவிர, தனது பதவியைப் பயன்படுத்தி வடக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்ற கருத்து தமிழ் மக்கள் மத்தியில் பேசுபடுபொருளாக உள்ளது.

தவிர, வடக்கு மாகாண ஆளுநர் பதவியேற்ற கையோடு வேகமாகச் செயலாற்றினாராயினும் தற்போது அவர் தனது வேகத்தை அடியோடு கைவிட்டுவிட்டார் என்ற கருத்தும் உலாவுகிறது.

இதற்கு மேலாக, வடக்கு மாகாணத்தில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பேன் – அதனை அபிவிருத்தி செய்வேன் என்று கூறிய ஆளுநர், அது தொடர்பில் எடுத்த நடவடிக்கையால், கால்நடை வளர்ப்பில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டதா? என்ற கேள்விகளும் இருக்கவே செய்கின்றன.

இதற்கு மேலாக, இப்போது சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என ஆளுநர் அறிக்கை விட்டுள்ளார்.

இந்த அறிக்கையானது செயலுருப் பெறக்கூடியதாகத் தெரியவில்லை.

மாறாக, சிங்கப்பூர் மற்றும் மலேசிய நாடுகளுக்குத் தான் மேற்கொண்ட விஜயத்துக்கான ஓர் அறிக்கையாக மட்டுமே அது பார்க்கப்படுகிறது.

ஆக, எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றப் பதவிகளைப் பெற்று நலன்களை அனுபவிக்கையில்,

வடக்கு மாகாண ஆளுநரும்; நடைமுறைப்படுத்தப்படாத அறிக்கைகளை வெளியிட்டு வடபகுதி மக்களை ஏமாற்றுவதாக இருந்தால், வடபகுதி மக்கள் அதிலும் குறிப்பாக அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்துகின்ற மக்களின் எதிர்காலம் எப்படியாகும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆக, வடக்கு மாகாண ஆளுநர் தனது பதவிக் காலத்தில் செய்யக்கூடிய நன்மைகளை வடபகுதி மக்களுக்குச் செய்ய வேண்டும்.

அதனைச் செய்வதற்காக, வடக்கில் உள்ள அடிமட்டக் கிராமங்களுக்குச் சென்று அங்கு வாழும் மக்களைச் சந்தித்து அவர்களின் வாழ்க்கை நிலை எப்படியிருக்கிறது என்பதை அறிய வேண்டும்.

அதிலிருந்து அந்த மக்களுக்கான பணியை ஆற்ற வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# தியாக தீபம் திலீபன் ஒட்டு மொத்த தமிழர்களின் அடையாளம்

## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபன் யாழ்.மாநகர சபைக்கு மாத்திரம் சொந்தமானவர் அல்ல. ஒட்டு மொத்த தமிழ் மக்களின் அடையாளம். அவரை நாம் மாநகர சபைக்குள் முடக்கவில்லை என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளை பொதுக் கட்டமைப்பொன்றினை உருவாக்கி முன்னெடுத்துச் செல்வதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே முதல்வர் அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் கட்டமைப்பை யாழ். மாநகர சபைக்குள் மட்டுப்படுத்த மாட்டோம்."

பொதுக் கட்டமைப்பு என்பது பொதுவான ஒரு அமைப்பாகவே உருவாக்கவே இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளோம். இதற்கும் மாநகர சபைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றார்.

குறித்த கலந்துரையாடலில் அரசியல் விமர்சகரும், யாழ். பல்கலைக்கழக அரசியல்துறை பேராசிரியர் கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் தெரிவிக்கையில்,

இந்த பொதுக் கட்டமைப்பு அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். தமது அரசியலுக்கு இந்தக் கட்டமைப்பை எவரும் பயன்படுத்தக் கூடாது. இதுவொரு நினைவேந்தல் கட்டமைப்பாக இருக்க வேண்டும்.

இந்தக்கட்டமைப்புக்குள் அரசியல் புகுந்து கொண்டால், அரசியலுக்காக இந்த கட்டமைப்பை எவரேனும் பயன்படுத்த முனைந்தால் இதில் இருந்து நான் உடனடியாக வெளியேறி செல்வேன் என தெரிவித்தார்.

(ம-7,33,104)

# தியாகி திலீபனின் நினைவேந்தல் அரசியல் சார்ந்ததாக இருக்கக்கூடாது

## எம். கே. சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் அரசியல் சார்ந்ததாக இருக்கக்கூடாது என வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

திலீபன் நினைவேந்தல் தொடர்பான கட்டமைப்பை உருவாக்கும் கலந்துரையாடல் நேற்று யாழ். நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம்ஆண்டுக்கு முன்னர் நினைவேந்தலை யார் செய்வது என்ற பிரச்சினை ஏற்படவில்லை. அதன் பின்னர் நினைவேந்தல் நிகழ்வுகளில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் யார் பெயர் எடுப்பது என்பது தான் காரணம்.

எனவே நினைவேந்தல் நிகழ்வுகள் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்த பொதுக்கட்டமைப்பானது அரசியல் கட்சி சார்ந்ததாகவோ அரசியல் வாதிகள் சார்ந்தோர் இல்லாமல் இருக்க வேண்டும்.

மாவீரர்களின் பெற்றோர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகளை முன்னிறுத்தி பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவோம். பின்னணியில் நாம் அரசியல்வாதிகள் அவர்களுக்கு உறுதுணையாக, பாதுகாப்பாக இருப்போம் என்றார்.

வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவிக்கையில்,

இந்த பொதுக்கட்டமைப்பு முழுமையான பொதுக் கட்டமைப்பாக உருவாக வேண்டும் ஆயின், வடக்கு கிழக்கின் பிரதிநிதிகளை உள்ளடக்கி இக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

நினைவேந்தல் நிகழ்வுகளில் தங்களை முன்னிலைப்படுத்தவில்லை என எவரும் விலகி இருக்க முடியாது.

ஆரம்ப நிகழ்வில் நான் குறித்த நேரத்திற்கு நினைவிடம் செல்லவில்லை. அதற்குக் காரணம் முதல் நாட்களில் விரும்பத்தகாத செயல்கள் நினைவிடத்தில் இடம் பெற்றதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளாலேயாகும்.

நிகழ்வுகள் ஆரம்பமாகி ஒரு மணிநேரம் கழித்தே சென்றேன். இனிவரும் காலங்களில் இவ்வாறான நிலைகள் இடம்பெறாதவாறு இருக்க வேண்டும் என்றார்.

(ம-7,33,104)

# திருமணத்தில் மோதல் 6 பேர் காயம்

(பாணந்துறை)

பாணந்துறையில் சுற்றுலா விடுதி ஒன்றில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற திருமணத்தின் போது இடம் பெற்ற மோதலில் 6 பேர் காய மடைந்துள்ளனர். இது தொடர்பில் 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோதலில் காயமடைந்தவர்கள் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களால் தாக்கப்பட்ட ஹோட்டல் ஊழியர்கள் ஐவரும், மலர் அலங்காரம் செய்வதற்கு வந்த ஒருவருமே இவ்வாறு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மற்றும் கடுகண்ணாவ பிரதேசத்தைச் சேர்ந்த தரப்பினராலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களால் ஹோட்டல் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# கோவிட் தொற்று மேலும் இருவர் பலி

இலங்கையில் மேலும் 2 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை 16,744 ஆக பதிவாகியுள்ளது. (ம-7)

# சுற்றுலாத்துறையை மீட்க சங்கக்கார அழைப்பு

இலங்கையில் வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்காக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு வருமாறு சிறிலங்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் குமார் சங்கக்கார அழைப்பு விடுத்துள்ளார்.

முகநூல் பதிவொன்றை வெளியிட்டுள்ள குமார் சங்கக்கார இலங்கையின் சுற்றுலாத்துறை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என அனைவருக்கும் நினைவூட்டியுள்ளார்.

இலங்கையின் நிலப்பரப்புப் படங்களை அவர் தமது முகநூல் பதிவில் பகிர்ந்துள்ளதோடு, அவற்றை மக்கள் தமது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் கோரியுள்ளார்.

இலங்கையில் வீழ்ச்சி கண்டுள்ள சுற்றுலாத் துறையை மீட்டெடுக்க உலகிலுள்ள அனைத்து நண்பர்களும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இலங்கையர்களுக்கு மிகவும் கடினமான ஆண்டாக அமைந்திருந்தாலும், மக்களின் போராட்டங்களால் சில சாதகமான மாற்றங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளது.

எனவே சுற்றுலாப் பயணிகள் தயங்காமல் தங்கள் விடுமுறைக்கான விமானப் பயணச் சீட்டுகளை பதிவு செய்யலாம் என குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனுடனான போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்தக் கூடாது

## ரஷ்யாவை எச்சரித்த அமெரிக்கா

**(வோஷிங்டன்)**

**உக்ரைன் போரில் இரசாயன அல்லது தந்திரோபாய அணு ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

ஊடகம் ஒன்றிற்கான நேர் காணலின் போது கருத்து தெரி விக்கையிலேயே பைடன் இத னைத் தெரிவித்தார்.

அணு ஆயுதங்கள் ஏறக்கு றைய 80 ஆண்டுகளாக உள் ளன. பல நாடுகள் தங்கள் தேசிய பாதுகாப்பிற்கு உத்தர வாதம் அளிக்கும் ஒரு தடுப்பாக அவற்றைப் பார்க்கின்றன.

அமெரிக்க விஞ்ஞானிக ளின் கூட்டமைப்புப் படி, ரஷ்யா விடம் சுமார் 5,977 அணு ஆயுதங்கள் இருப்பதாக மதிப்பி டப்பட்டுள்ளது. இருப்பினும், அது அத்தகைய ஆயுதங்க ளைப் பயன்படுத்த விரும்புவது சாத்தியமில்லை.



நேட்டோ நாடுகளான அமெ ரிக்கா 5,428, பிரான்ஸ் 290 மற்றும் பிரித்தானியா 225 அணு ஆயுதங்களை வைத்து ள்ளன.

உக்ரைனுடனான போரில் ரஷ்யா அனுஅயுதங்களைப் பய ன்படுத்தக் கூடாது. இந்தக் கோட்டைத் தாண்டினால் விளைவுகள் கடுமையானதாக இருக்கும் என அவர் தெரிவித் தார். (நி)

---

**சீனாவில் பாரிய தீப்பரவல்**

# 42 மாடிக் கட்டடம் தீயில் எரிந்து நாசம்



(பீஜிங்)

சீனாவின் சாங்கா நகரில் உள்ள 42 அடுக்குமாடி கட்டடம் ஒன்றில் நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இதில் 715 அடி உயரமுள்ள கட்டடம் முழுவதும் தீயில் எரி ந்து நாசமானது.

சீனாவில் உள்ள ஹுனான் மாகாணத்தின் சாங்கா நகரில் இந்த 42 மாடி கட்டடம் உள் ளது. 715 அடி உயரமுள்ள இந்த கட்டடம் 2000 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

இந்த கட்டடத்தில் அரசுக்கு சொந்தமான தொலைத்தொட ர்பு நிறுவனமான சீனா டெலி காமின் அலுவலகம் இயங்கி வந்தது.

இந்த கட்டடத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதில் 42 மாடி முழுவதும் தீ மளமளவென பரவியது. தீயை அணைக்க, 280 தீய ணைப்பு வாகனங்களில் வந்த வீரர்கள் தீயை அணைக்க போராடினர்.

கட்டடம் மொத்தமும் தீக் கிரையாகியதால், அப்பகுதி முழுவதும் புகை மண்டலமா னது. ஆனால், இந்த தீ விபத் தில் உயிரிழப்புகள் குறித்து எந்த தகவலும் வெளியாக வில்லை. (நி)

---

## உக்ரைன் போரை நிறுத்துமாறு புடினிடம்

# மோடி நேரில் கோரிக்கை



(உஸ்பெகிஸ்தான்)

ரஷ்ய ஜனாதிபதி புடினை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய இந்திய பிரதமர் நரே ந்திர மோடி, விரைவில் உக் ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு அழைப்பு விடுத்தார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 2 நாள் உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ள இந் திய பிரதமர் நரேந்திர மோடி இம்மாநாட்டுக்கு வெளியே ரஷ்ய ஜனாதிபதி புடினை சந் தித்துப் பேசினார்.

இந்தியா உள்ளிட்ட 8 நாடு களை உறுப்பினர்களாக கொண்டுள்ள ஷாங்காய் ஒத்து ழைப்பு அமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு, உஸ்பெகிஸ் தான் நாட்டின் சமர்கண்ட் நக ரில் நேற்று முன்தினம் ஆரம் பமானது.

உச்சி மாநாடு கொரோனா பெருந்தொற்றால் 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் இப்போது தான் தலைவர்கள் நேரடி பங் கேற்புடன் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளு மாறு உஸ்பெகிஸ்தான் ஜனாதி பதி ஷவ்கத் மிர்சியோயேவ் அழைத்ததின் பேரில் பிரதமர் மோடி 2 நாள் பயணமாக அங்கு சென்றார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் மற்றும் பாகிஸ்தான், கஜ கஸ்தான், கிர்கிஸ்தான், தஜி கிஸ்தான், உஸ்பெகிஸ்தான் தலைவர்களுடன் இந்த மாநா ட்டில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். இந்த மாநாட்டின் இடையே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை பிரதமர் மோடி சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்த பின்னர் இரு தலைவர்களும் சந்தித்து பேசியது இதுவே முதல் முறை ஆகும்.

உக்ரைன் போரை முடிவு க்கு கொண்டு வரவும் பேச்சு வார்த்தையின் மூலம் பிரச்சி னைகளுக்கு தீர்வு காணவும் ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் பிரதமர் மோடி வலியுறுத்தி யதாக தகவல் அறிந்த வட்டா ரங்கள் தெரிவித்தன. (நி)

---

## இத்தாலியை ஒரே நாளில் மூழ்கடித்த கனமழை

## 9 பேர் உயிரிழப்பு

(வத்திக்கான்)

இத்தாலியின் மத்திய பகுதியில் ஒரே நாளில் பெய்த கனமழையில் ஒன்பது பேர் வரை உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இத்தாலியின் மார்ச்சே பகு தியில் ஒரு வருடத்தின் மூன்றில் ஒரு பங்கு மழை, ஒரே நாள் இரவில் முழுவது மாக கொட்டித் தீர்த்ததை தொட ர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தில் ஒன்பது பேர் உயிரிழந்து இரு



ப்பதாக அதிகாரிகள் தெரிவித்து ள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இரண்டு முதல் மூன்று மணி நேரத்திற்குள் சுமார் 400 மில்லி மீற்றர் மழை பெய் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

---

# இரண்டாம் எலிசபெத் மகாராணி மறைவு

## வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்திற்குள் நுழைய சீனாவுக்குத் தடை

(லண்டன்)

வெஸ்ட்மின்ஸ்டர் மண்டப த்திற்குள் வைக்கப்பட்டுள்ள இரண்டாம் எலிசபெத் மகாரா ணியின் உடலுக்கு அஞ்சலி செலுத்த சீனாவுக்கு தடை விதி க்கப்பட்டுள்ளது.

ஹவுஸ் ஒஃப் காமன்ஸ் சபாநாயகர் சர் லிண்ட்சே ஹோய்ல், ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இர ண்டு சகாக்களுக்கு எதிரான சீனத் தடைகள் காரணமாக வெஸ்ட்மின்ஸ்டர் அறையை அணுகுவதற்கான கோரிக் கையை மறுத்துவிட்டார்.

நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள ராணி எலிச பெத்தின் இறுதிச் சடங்கு வரை, வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தி லேயே அவர் வைக்கப்பட்டிரு ப்பார் என தெரிவிக்கப்பட்டு ள்ளது.

கடந்த ஆண்டு, உய்குர் முஸ்லிம்களை சீனா தவறாக வழிநடத்தியதாக குற்றஞ்சாட் டிய பிறகு, சீனா ஒன்பது பிரித் தானியர்கள், ஏழு பாராளும ன்ற உறுப்பினர்கள் உட்பட்ட வர்களுக்கு பயணத் தடை மற்றும் சொத்துக்களை முடக்கி யது.

இது பிரித்தானியாவில் உள்ள சீனாவின் தூதர் பாரா ளுமன்றத்தில் இருந்து தடை செய்யப்படுவதற்கு வழிவகு த்தது. இது இப்போது ராணி எலிசபெத்திற்கு அஞ்சலி செலு த்துவதற்கு தடைவிதிக்கவும் வழிவகுத்துள்ளது.

இருப்பினும், சீனாவின் துணை ஜனாதிபதி திங்கட் கிழமை வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் பாராளுமன்றத்திலி ருந்து வீதியின் குறுக்கே நடை பெறும் அரச இறுதிச் சடங்கில் கலந்துகொள்வார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா...

திங்கட்கிழமை நியூயோர்க் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அமர்வில் வெளிவிவகார அமைச்சர் உரையாற்றவுள்ளார்.

இதன்போது கடந்த 13ஆம் திகதி ஆரம்பமான பொதுச்சபையின் 77 ஆவது அமர்வு செப்ரெம்பர் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மேலும் இந்த அமர்வில் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 50 கிலோ...

தெரிவித்துள்ளார்.

அகுனுகொல பெலஸவில், நேற்று இடம்பெற்ற சிறிய அளவிலான விவசாய வியாபார வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டபோதே மேற்குறிப்பிட்ட விடய்த்தை அவர் குறிப்பிட்டார்.

குறித்த பிரேரணைக்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் இரண்டரை ஏக்கருக்கும் குறைவான விவசாய நிலங்களைக் கொண்ட விவசாயிகளுக்கு உர மூடைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## தியாக தீபம்...

குழு அமைக்கப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை பொதுக்கட்டமைப்பொன்றினை உருவாக்கி அதன் ஊடாக நிகழ்வு ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், மூத்த முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் கலந்துகொண்ட பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். " அரசியல் கலப்பற்ற ஒரு கட்டமைப்பாக இது உருவாக வேண்டும். அரசியல்வாதிகள் தமது அரசியலுக்கு அப்பால் இக் கட்டமைப்பிற்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும்" என்பதே பலரின் கோரிக்கையாக இருந்தது.

கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களின் கருத்து பகிர்வுகளை தொடர்ந்து முதல் கட்டமாக பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதற்காக மாவீரர்களின் தந்தையும் மூத்த போராளியான பஷீர் காக்கா தலைமையில் மூத்த போராளிகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதி உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவானது எதிர்வரும் நாட்களில் மதகுருமார்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கங்கள், பொது அமைப்புக்கள் என அனைத்து தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம், அதன் நோக்கம், எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகள் என்பன தொடர்பில் எடுத்துக்கூறி அவர்களையும் ஒன்றிணைத்து முழுமையான பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது. (ம-7,33)

## ஒன்றிணைந்தால்...

பலமாக கடந்த கால தோல்விகளை பயன்படுத்தியதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆகவே ஒரு நாடாக இலங்கையை வெற்றி பெற வைப்பது கடினமான காரியம் அல்ல எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு குழுவாக இணைந்து செயற்பட்டமை இலங்கை ஆசிய கிண்ணத்தை கைப்பற்ற உதவியதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிய கிண்ணம், ஆசிய வலைப்பந்து சம்பியன், பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை இன்று ஆப்கானிஸ்தானை விடவும் வீழ்ச்சியடைந்த நிலையிலேயே உள்ளது. இந்நிலைமையிலிருந்து மீள முடியாது என்று சிலர் எண்ணுகின்றனர்.

கிரிக்கெட் விளையாட்டில் ஆப்கானிஸ்தானிடம் தோல்வியடைந்த போது இலங்கை கிரிக்கெட் அணி பின்வாங்காமல் பலத்துடன் அடுத்த கட்டத்திற்குச் சென்றது.

அதேபோன்று நாமும் தோல்வியை வெற்றியடைவதற்கான ஆயுதமாக்கிக் கொண்டால் விரைவில் நெருக்கடிகளிலிருந்து மீள முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கை- இந்...

இந்தியா சுதந்திரமடைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை நினைவுகூரும் விதமாக இலங்கை - இந்திய அமைப்பினால் கொழும்பிலுள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இராப்போசன விருந்துபசார நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இந்திய உயர்ஸ்தானிகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை - இந்திய அமைப்பானது கடந்த 1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை வலுப் படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இம்முறை இந்தியா 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதைப் போன்று அடுத்த வருடம் இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைகின்றன.

ஐக்கியத்தை மற்றொரு விதமாகக் கூறுவதெனில், இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் வலுவடைந்து 75 வருடங்களாகின்றன என்றும் குறிப்பிட்டார்.

"1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபோது ஒருமைப்பாட்டையும் சுயாட்சியையும் நிலைநிறுத்துவதை முன்னிறுத்தி இயங்க வேண்டியிருந்த போதிலும், இப்போது இந்தியா நீண்ட தூரத்தைக் கடந்து வந்துவிட்டது.

எனவே அடுத்தகட்டமாக 2047 ஆம் ஆண்டாகும் போது இலங்கையும் இந்தியாவும் எவ்வாறிருக்கும் எவ்வாறிருக்க வேண்டும் என்பது குறித்து சிந்திக்க வேண்டும் என்று இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மேலும் தெரிவித்தார். (ம-7)

## ஓமந்தையில்...

மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஓமந்தை விளக்குவைத்த குளம் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எஸ்.நகுலன் என்பவரே மரணமடைந்தவராவார்.

விபத்தில் சம்பவ இடத்திலேயே குறித்த குடும்பஸ்தர் மரணமடைந்த நிலையில், சடலம் புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு, வவுனியா புகையிரத நிலையத்தில் வைத்து பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது.

பொலிஸாரால் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,25)

## திருக்கோணேஸ்...

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய தல யாத்திரை நேற்று நல்லூரில் இருந்து ஆரம்பமாகியது.

தல யாத்திரை செல்லும் அடியார்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை திருகோணேஸ்வரர் ஆலயத்தில் திருவாசக முற்றோதலில் ஈடுபடுவர். (ம-33)

தன நிதானய
திகதி - 2022.09.17
சீட்டிழுப்பு இலக்கம் - 911
N 22 24 30 37

மஹஜன சம்பத
திகதி 2022/09/17
சீட்டிழுப்பு இலக்கம் 4881
M 8 1 9 3 3 0

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.09.17
சீட்டிழுப்பு இலக்கம் 190
கன்னி 03 09 24 40 கன்னி

மெகா பவர்
திகதி 17/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1229
L 05 07 09 61 74

கொவிசெத
திகதி 2022.09.17
சீட்டிழுப்பு இலக்கம் 3123
R 06 27 32 76

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1336
மிதுனம் 1 9 0 6 7 4

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1856
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.09.17
தினம் சனிக்கிழமை
Y 11 13 15 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,482,520/-

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.09.17
சீட்டிழுப்பு இல : 4017
வர்ணம் : பச்சை
ரூ. 4,375,540/-
25 39 45 49 N

ராசி
ரூ. 4,671,873/-
திகதி 2022-09-17
வெற்றி வாரம் 3568
25 27 33 61
வர்ணம் இள நீலம்
ரூ. 8,031,500/-

26 வசனா
I 15 01 56 60 75
1032
சிவப்பு
2022.09.17
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 261,403,783/-
011-2 333 546-47
Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 528
திகதி 2022-09-17
வர்ணம் சிவப்பு
I 40 51 69 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,684,304/-
Web: www.dlb.lk

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1682
ரூ. 3,273,840/-
சீட்டிழுப்பு திகதி : 2022.09.17
49 52 63 66 O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sb Travels & Tours Pvt Ltd

சகல விதமான விமான பயணச் சீட்டுகளிற்கான நேரடி முகவராக IATA Agent ஆக செயற்படும் Sb Travels and Pvt Ltd சகல நாடுகளிற்கான விமான பயணச் சீட்டுகள், Travel Itinerary Travel Insurance (Dubai, Malasiya, India, Bangkok, vina விசாக்கள் பெற்றுத் தரப்படும்.) ஐரோப்பிய நாடுகளிற்கான விசா விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தும் Appointment எடுத்தும் தரப்படும் மற்றும் விமானப் பயணத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தருகின்றோம்.

**தற்போது Colombo to Chennai - Indigo 63999/=**
**Srilanka Airlines - 74000/=**
(நிபந்தனைக்குட்பட்டது)

தொடர்புகளுக்கு : **Sb Travels & Tours Pvt Ltd**

No.198, Kasthuriyar Road, Jaffna (021 222 9555, 222 8555, 076 691 1082, 83)

No.4, Gintupitiya Street, Colombo - 13 (011 233 3322, 076 691 1089)

No.324, Aluthmavatha Road, Colombo - 15 (011 254 0280, 077 108 3481)

Email : sbtravels99@yahoo.com (C-4930)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1978, அரச உயர் பதவியில் இருக்கும் அழகிய மணமகனுக்கு தகுந்த வரனை எதிர்பார்க்கின்றோம். செவ்வாய் குற்றம் இல்லை. விவாகரத்தானவர்.

தொடர்பு (12812)

**076 690 1212**

## திணறும் அரச...

க்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவது போன்றவை பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக அறிய முடிகிறது.

அமைச்சுக்களில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பது மாத்திரமன்றி ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை பராமரிப்பதிலும் கூட கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுகாதாரம், கல்வி, நெடுஞ்சாலைகள், வீடமைப்பு போன்ற அமைச்சுக்களில் ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை இருபதாயிரம் கோடிக்கு மேல் உள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை)A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (12707)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## இலகுவில் சிங்களம் பேச

சிங்களம் மொழி பேசுவதற்கான வகுப்புக்கள் வெற்றிகரமாக நடைபெறுகின்றது. அனைவரும் இணையுங்கள்.

(12807) தொடர்பு

**077 065 2181**
**070 403 5735** zoom

## காணி விற்பனைக்கு

ஊரெழு சுன்னாகம் பிள்ளையார் வீதியில் புன்னாலைக்கட்டுவன் வீதியிலிருந்து 300m தூரமளவில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

உரிமையாளர் (12799)

**070 733 4989**

## கார் விற்பனைக்கு

- **Toyota prius**
- CAA - 993X
- 2013 Register
- Pearl white
- first Owner
- 3rd generation

**85 இலட்சம்** (C-4929)

**075 663 3001**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி கேணியடி வைரவர் கோவில் அருகில் 2 பரப்பு நீள் சதுரக் காணி மூன்று பக்க சுற்று மதில் மற்றும் குழாய்க் கிணறு ஆகியவற்றுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

**076 231 3139**
**071 822 9630** (12798)

## வாழைக்குட்டி விற்பனைக்கு

கிளிநொச்சியில் 155 ஆம் கட்டையில் வாழைக்குட்டி விற்பனைக்கு உள்ளது. கப்பல் வாழைக்குட்டியும் அம்பன் வாழைக்குட்டியும் உள்ளது. (C-4928)

**076 916 3276**
**075 663 3001**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா வேலைகளும் செய்து தரப்படும். (C-4921)




Visa Extension வெளிநாட்டு Passport க்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

**0777-068-777**

## மணமகள் தேவை

வெளிநாட்டில் வசிக்கும் டாக்டர் (MBBS) மணமகனுக்கு (19-26) வயது வரையுள்ள படித்த அழகிய மணமகள் தேவை. (12738)

Whatsapp/Viber

**004560675287**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையத்திற்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் பெண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (12793)

**077 777 0916**

## இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா



அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4921)



!!அலட்சியம் வேண்டாம்!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம். குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்.

**V2 TRAVELS** 0768226244 0768226240

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS** (C-4921)

மாது கிளைகள்: கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • ஊர்காவற்துறை • பண்டத்தரிப்பு • வவுனியா • முல்லைத்தீவு • கிளிநொச்சி

- பயிற்சிக்கான கட்டணம் - 00,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -65,000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- 20 அடி பாதையுடன்

**076 755 8606** (12790)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த 7 இல் செவ்வாய் உள்ள அனுஷ நட்சத்திரம் கிரக பாவம் 50 உடைய சொத்துள்ள மணமகனுக்கு ஆசிரிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டது. (12740)

**077 986 5957**

## மணமகள்கள் தேவை

யாழ். கௌரவ குல ஐரோப்பிய குடியுரிமையுள்ள படித்த ஒழுக்கமான மணமகன்களிற்க 30-38 (விவாகரத்தானோர் உட்பட) மற்றும் 23-27 வயதில் குடும்பப்பாங்கான கௌரவ குல மணமகள்கள் தேவை.

தொடர்புகளுக்கு

**076 123 3447**

அஷயா (12800)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 36 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12790)

**077 658 5999, 076 436 5814, 077 874 8135**

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

## Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

1 சதுர அடி **150/=** இல் இருந்து (12805)

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம். உத்தரவாதம் தரும் பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

உலகத்தரம்மிக்கது

வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**North and East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## EDUS Law College Entrance Exam

Learning made lovable

### சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை

தொடர் வழிகாட்டல் கருத்தரங்கு

- Aptitude — R.Thiraviyaraj, SLAS
- English — S.M.B.M.Arshad
- Comprehension — A.K.Keerthirajan, M.A in Tamil
- General Knowledge — A.M Riyas, SLTS in Journalism

ஆரம்பம் September 15 2022

- முன்னோடி ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டல்..!
- முக்கிய குறிப்புகளும் கையேடுகளும் வழங்கப்படும்..!
- குழப்பமில்லாத நேரசூசி..!
- அனைவருக்கும் பொருத்தமான நேரங்களில் தனிப்பட்ட கவனத்துடன் கூடிய வகுப்புக்கள்..!

www.edus.lk 0777 123 330 **Enroll Now** (C-4340)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org